விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 269 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை (14.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
(C-3874)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kanthermadam Junction, Jaffna
021 7534 807

## பயங்கரவாதச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான வரைவு இறுதிக்கட்டத்தில்

### நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார



(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான வரைவு சட்டமூலம் அடுத்த வாரம் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்படும் என்று 22ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப் புலிகளின் கப்பல்கள் இந்தியாவின் ஆதரவுடனேயே தகர்ப்பு

### முன்னாள் கடற்படை அதிகாரி டி.கே.லால்காந்த



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வைத்திருந்த கப்பல்களில் 12 கப்பல்கள் இந்திய கடற்படையின் ஆதரவிலேயே நிர்மூலமாக்கப்பட்டதாக முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளரும் இறுதிப் போரில் வடக்கு கடற்படை முன்னிலை பாதுகாப்பு வலயத்தின் கட்டளையிடும் 22ஆம் பக்கம் பார்க்க

# ராஜபக்ஷ குடும்பத்தினர் பெரும் குற்றவாளிகள்

### சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது
### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

குடும்ப ஆட்சி நடத்திய ராஜபக்ஷ குடும்பத்தினர் பெரும் குற்றவாளிகள். சட்டத்தின் பிடியிலிருந்து அவர்கள் தப்பவே முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை!

### பிரதி அமைச்சர் அருண ஜயசேகர

(கொழும்பு)

இலங்கையில் எந்தவிதமான போர்க்குற்றங்களும் இடம்பெறவில்லை என்று பிரதிப் பாதுகாப்பு 22ஆம் பக்கம் பார்க்க

## பொருளாதார வளர்ச்சி அரசாங்கத்தின் நோக்கம்

### ஜனாதிபதி அநுர குமார

(கொழும்பு)

பொருளாதார வளர்ச்சி அடைவதே அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 22ஆம் பக்கம் பார்க்க

## எம்.பிக்களின் ஓய்வூதியத்தை நீக்குவதற்கான சட்டம் விரைவில்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்கான சட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்துதெரிவிக்கையில், ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற் 22ஆம் பக்கம் பார்க்க

## நாட்டின் அரசியலில் விரைவில் பாரிய சுழல் காற்று வீசும்

### விசேட செவ்வியில் மகிந்த எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டின் அரசியலில் விரைவில் பாரிய சுழல் காற்று வீசக்கூடும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

நேற்று வழங்கிய விசேட செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

22ஆம் பக்கம் பார்க்க

தாமதிக்காமல் நிறைவுக்கு முந்தய விலையில் பெற இப்போதே முந்துங்கள்




(C-277)
MARINASQUARE.LK
+94 77 2272 727
Access
*T&C apply

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் விற்பனைக்கு

01. யாழ்.கே.கே.எஸ் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே. எஸ் வீதி முகப்புடன் 150 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட காணித் துண்டு.
02. யாழ்.விக்டோரியா வீதி முகப்புடன் 16பரப்பும் 12 பரப்பும் 14 பரப்பும் 8 பரப்பும் 6 பரப்புக் காணிகளும்
03. யாழ்.CTB தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 2 மாடிக் கடைகளும்
04. யாழ்.கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாவிற்கும் சாரங்கா நகைமாளிகைக்கும் இடையில் 4கடைகளும்
05. யாழ்.பிறவுண் வீதியில் ஒரு பரப்பு , 2 ½ பரப்பு, 3 ½ பரப்பு காணியும்
06. யாழ்.குறொஸ் வீதியில் 12 பரப்பும் 6 பரப்பும் உடன் விற்பனைக்குண்டு.

(C-3867)

**077 723 2535**

## நினைவஞ்சலிகள்

48 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு





மலர்வு 24.07.1929 **வைரமுத்து இளையதம்பி** உதிர்வு 15.05.1977

(சைக்கிள் கடை மணியம்)
திதி: வைகாசி அமாவாசை

மலர்வு 06.04.1936 **இளையதம்பி யோகேஸ்வரி** உதிர்வு 18.09.2022

திதி: ஆவணி மாத
தேய்பிறை அட்டமி

பல்லோர் புழகப் பாங்கைத் தந்தீர்
நல்லோர் எனவே ஆக்கி வளர்த்தீர்
வெல்லும் வகையில் விவேகம் தந்தீர்
அன்பொடு அணைப்பை நினைத்தே நிற்க
ஆண்டு மூன்று மற்றும் நாற்பத்தெட்டு ஆனதென நாமும்
வேண்டுதல் செய்வம் தெய்வம் என்றே.

ஈஸ்வரிவாசா
கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி.
077 376 0575

(1549)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்

**அன்பே சிவம் அறக்கட்டளை**

**சூரிச் அருள்மிகு சிவன் கோவில் சைவத் தமிழ்ச் சங்கம்**

## பணிநிலை வேண்டுகை

01. **தாதிய உத்தியோகத்தர்**
    தகைமை 01. தாதிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொழிற்பயிற்சியினை பூர்த்தி செய்த சான்றிதழ் கொண்டிருத்தல் வேண்டும்.
    02. குறிப்பிட்ட துறையில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.
02. **மூதாளர் மகிழ்வூட்டல் உத்தியோகத்தர்**
    தகைமை: சம்பந்தப்பட்ட துறையில் முன் அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
03. **சமையல் பணியாளர்கள்**
04. **உணவு பரிமாறுபவர்கள்**

மேற்படி பணிநிலைகளுக்கான விண்ணப்பங்களை 30.09.2025 ற்கு முன்னதாக தபால் மூல முகவரி அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**குமரேசன் குமணன்.**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**அன்பேசிவம் அறக்கட்டளை.**

சிவபுரவளாகம்,
A9 வீதி, முகமாலை,
பளை.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
இலக்கம்: 021 205 0591, 077 622 4038

## வைத்தியம்

**கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் வயிற்றுப்புண் | Gastritis அல்சர் | மிகச்சிறந்த மூலிகை, Acu சிகிச்சைகள்**

**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)**
தொடர்புகளுக்கு : **0777 301 669**

(5414)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகர்ப்பகுதியில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு மேற்படி பதவிகளிற்கு வேலையாட்கள்தேவை.

**கணக்காளர் (ஆண்,பெண்)**
**காசாளர் (ஆண்,பெண்)**

தகைமை :☞ O/L, A/L,சித்தி
☞ அடிப்படைக் கணனி அறிவு

விண்ணப்பிக்க விரும்புவர்கள் கீழ்க்காணும் Whatsapp அல்லது Email இற்கு தங்களது சுயவிபரக்கோவையினை (Curriculam Vitae) அனுப்பி வைக்கவும்.

(C-3872)

**076 561 7856**
**Northlanka20@gmail.com**

வலம்புரி விளம்பரங்கள் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் கடை ஒன்றிற்கு சாரதி மற்றும் பொருட்களை விநியோகிப்பதற்கு கள விநியோகஸ்தர் தேவை.

தொடர்புக்கு :
**077 392 3036**

(5417)

## வாடகைக்கு


யாழ். வைமன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**077 723 2535**

(C-3875)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 - 11 - 1938 | 10 - 09 - 2025 |



# வீரகத்தி சின்னத்துரை

மத்தொனியைப் பிறப்பிடமாகவும் கொடிகாமவீதி நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய சுங்க இலாக அதிகாரி வீரகத்தி சின்னத்துரை அவர்கள் கடந்த (10.09.2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - மீனாட்சி தம்பதியினரின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி குகதாசன் (ஜேர்மனி), ஜெயந்தினி ஜெயா (ஜேர்மனி), கெங்கா சந்திரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிசாந்தன், கௌதம், கல்யாணி, பைரவி, பிரியன், நீரஜா, சஞ்சீபன், சந்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் அமீலியா, ஆர்யன், சாய், சனா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் காலஞ்சென்ற புவனேஸ்வரி வேலாயுதம் அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2025) ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொடிகாமவீதி,
நெல்லியடி.

(C-3869)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்-காற்றாலை விவகாரம்

# சாதகமான பதில் கிடைத்தால் போராட்டத்தைக் கைவிடுவோம்!

### அருட்தந்தை மாக்கஸ் அடிகளார்

**(மன்னார்)**

**மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் கோபுரங்கள் குறித்து துரித நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஒரு மாத காலக்கெடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்த நிலையில்,ஜனாதிபதியின் சாதக பதிலை தாம் எதிர்பார்த்துள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் காற்றாலை, கனிய மண் அகழ்விற்கு எதிரான போராட்டம் 41 ஆவது நாட்களை கடந்து இடம்பெற்று வருகின்ற நிலையில் அங்கு இடம் பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து எமது போராட்டத்தின் பலனாக நல்ல முடிவு வரும் என எதிர்பார்த்து காத்திருந்தோம்.

இதுவரை எந்த முடிவுகளும் ஜனாதிபதியிடம் இருந்து எமக்கு கிடைக்கவில்லை. பல தடவைகள் நாங்கள் மன்னார் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு கடந்த 30 நாட்களுக்குள் நடந்த செயற்றிட்டங்கள் குறித்து கேட்டறிந்ததோடு, எமக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படாமை குறித்து தெரிவித்தோம்.

எனினும் தமக்கும் எவ்வித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என்ற பதில் எமக்கு கிடைத்தது. முக்கிய மூன்று கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு முன்வைத்தோம். புதிதாக அமைக்கப்பட்டு வரும் 04 காற்றாலைகள், மேலும் அமைக்கப்படவுள்ள 10 காற்றாலை வேலைத்திட்டங்களும் உடன் நிறுத்தப்பட்டு, குறித்த திட்டம் வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து கனிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்படகூடாது. தடை செய்ய வேண்டும் மன்னாரில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட காற்றாலை திட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் உடன் நிவர்த்தி செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயரங்களில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளையும் நாங்கள் போராட்டக் குழு சார்பாக ஜனாதிபதியிடம் முன்வைத்தோம்.

நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். காற்றாலை திட்டத்திற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை.ஆனால் மன்னார் மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழிடத்தையும் பாதிக்கின்ற எந்த திட்டமும் எமக்கு வேண்டாம்.

எனவே அரசாங்கம் எமது கோரிக்கைகளை ஏற்று செவி சாய்க்க வேண்டும். இல்லை என்றால் எமது போராட்டம் வேறு திசைகளில் விரிவடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (8-285)

---

## வேலணை பிரதேச சபை


## வளமான நாடும் - அழகான வாழ்க்கையும் மறுமலர்ச்சி நகரம்

## உள்ளூராட்சி வாரம்-2025

| இல | திகதி | சேவை | நிகழ்ச்சித் திட்டங்கள் | ஒழுங்குபடுத்தப்படும் இடங்கள் மற்றும் பங்கேற்கும் அரச நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2025.09.15 | நடமாடும் சேவை தினம் | ஆயுள் வேத மருத்துவ நடமாடும் சேவை | மண்டைதீவு உபஅலுவலகம், அல்லைப்பிட்டி உபஅலுவலகம் |
| | | | பொது நூலகங்களினால் பொது மக்கள் கூடுதலாக உள்ள பகுதிகளில் புத்தக கண்காட்சி | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி |
| | | | விழிப்புணர்வு பதாதைகளை காட்சிப்படுத்தல் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி |
| | | | பொது மக்கள் சேவைகளை பூர்த்தி செய்தல் | பிராந்திய சுகாதாரத் திணைக்களம் |
| | | | | பிரதேச செயலகம் |
| | | | | நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை |
| 2 | 2025.09.16 | சுற்றாடல் மற்றும் மர நடுகை தினம் | பயன் தரு மரங்களை நாட்டுதல் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி அலுவலகங்கள் |
| | | | நிழல் தரு மரங்களை நாட்டுதல் | மயானங்கள் |
| | | | விழிப்புணர்வு பதாதைகளை காட்சிப்படுத்தல் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி அலுவலகங்கள் |
| 3 | 2025.09.17 | சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தினம் | வீதிகளின் சாலையோரங்களில் சிரமதானம் செய்தல் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி |
| | | | டெங்கு, சிக்குன்குனியா தொடர்பான விழிப்புணர்வுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி |
| | | | நாய்களுக்கு தடுப்பூசி மற்றும் உரிமம் வழங்கல் | சுகாதார மற்றும் கால்நடை வைத்திய திணைக்களம் |
| 4 | 2025.09.18 | வருமானம் மற்றும் மேம்பாட்டுத் திணைக்களம் | எமது சபையின் வருமானங்கள் சேவைகள் தொடர்பான விடயங்களை பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி |
| 5 | 2025.09.19 | இலக்கியம்,கல்வி மற்றும் நூலக மேம்பாட்டு தினம் | நூலக அங்கத்தவர்களுக்கிடையிலான போட்டிகளை நடாத்துதல் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி |
| | | | கலை நிகழ்வுகளை நடாத்துதல் | சனசமூக நிலையங்கள் |
| | | | பாலர் பாடசாலை குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களுக்கான வாசிப்பு பழக்கத்தை செயல்படுத்தல் | வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி |
| 6 | 2025.09.20 | பொது மக்கள் பயன்பாட்டு மற்றும் விளையாட்டு தினம் | எமது சபையின் எல்லைக்குட்பட்ட பொது பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவதுடன் சொத்துக்களைப் பராமரித்தல் | சந்தைகள், குடிநீர் வசதிகள், தெருவிளக்குகள், தகனகூடங்கள் |
| 7 | 2025.09.21 | சான்றிதழ் வழங்கல் மற்றும் நிகழ்ச்சி நிறைவு | விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல், சான்றிதழ்கள் வழங்கல், குறும்படங்கள் | சனசமூக நிலையங்களுக்கு கீழ் இயங்கும் விளையாட்டுக் கழகங்கள், எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட அரச திணைக்களங்கள் |

(C-3861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயப்பெருவிழா வின் தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை பல்லாயிரக்கணக் கான பக்த அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வ மாக இடம்பெற்றது. (படம்:சிவசாந்தன்)



எழுநாவின் ஏற்பாட்டில் காவேரிக்கலாமன்றத்தின் அனுசரணையுடன் விவசாய பீடத்தின் சமுதாய மேம்பாட்டுக் குழுவின் ஆதரவுடன் கலாநிதி S.J அரசகேசரியின் வடக்கு-கிழக்கு பிராந்திய அபிவிருத்தி யும் உயிர்ப்பல்வகைமையும் என்ற நூலின் வெளியீட்டு விழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் விவசாயபீட கேட் போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)



கரைச்சி கிழக்கு கிராமிய மீனவர் அமைப்பின் தொழி லாளர்களுக்கான ஓய்வு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இரணைமடுவில் அண்மையில் நடைபெற்றது. (படம்:தேவானந்தன்)



மன்னார் வங்காலை பொலிஸ் நிலையத்தின் சுற்றுலா விடுதியை கடந்த 1 ஆம் திகதி திங்கட்கிழமை பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய வைபவ ரீதியாக திறந்து வைத்தார். (படம்:ஜோசப்நயன்)



தமிழகத்தில் இருந்து வருகை தந்த கலைஞர்களின் வள்ளிக்கும்மி நடன ஆற்றுகை கடந்த 5 ஆம் திகதி நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)




கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் புதுக்காடு திருவருள்மிகு பூர்ணா புஷ்பகலா சமேத ஐயனார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த 4 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது. (படம்:தேவானந்தன்)



மகாத்மா காந்தி ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் "நடைமுறை யில் காந்தியக் கொள்கை" என்ற தலைப்பிலான இளை ஞர்களுக்கான கருத்தரங்கு சர்வோதயம் யாழ் மாவட்ட நிலை யத்தில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகமும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பண்பாட் டுப் பேரவையும் இணைந்து நடாத்தும் பிரதேச பண்பாட்டு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாணிக்கம் கந்தப்பு, முருகன் சிவபாதசுந்தரம், நாகமுத்து முத்துராசா, சீனியன் ஆறுமுகம், பொன்னம்பலம் சுகந்தன், ஜெயபாரதி கௌசிகன், சிவபாதராஜா மோகன்ராஜ், சின்னராசா உதயகுமார், மார்க்கண்டு செல்வதாஸ், மதியூகநாதன் மனுசங்கர் ஆகியோர் விருதுகளை பெற்றுக் கொண்டனர். (படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதம் நீக்கம் பாராட்டு தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை நீக்குவதற்கான சட்டம் வரவேற்க கூடியதாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,"பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு பணியில் இருக்கும் வரை வரப்பிரதாசங்கள் வழங்குவதே தகுந்த நடைமுறையாகும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் தனது பதவிக் காலம் முடிவடைந்து பின்னர் 5 ஆவது லேனிலுள்ள தனது வீட்டுக்கு சென்றார். அதேபோல் மற்றைய முன்னாள் ஜனாதிபதிகளும் தங்களின் சொந்த வீடுகளில் குடியேறியிருக்கலாம்.

அப்படி செய்திருந்தால் இன்று இந்த பிரச்சினை இல்லை. முன்னாள் ஜனாதிபதிகள் சிலர் முன்னுதாரணமாக செயற்பட முடியும் என்றால் ஏன் ஏனை யோருக்கு முடியவில்லை என்ற வினா எழுப்பப்படுகிறது.

இது சட்டமாக்கப்பட்டது நல்ல விடயமாகும். மேலும் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்களுக்கு பாதுகாப்பு அரவசியமாகும். அது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஜப்பானில் ஜனாதிபதி மற்றும் பிரதமர்கள் சாதாரண புகையிரதத்தில், பேருந்துகளில் பயணிப்பதை நான் கண்டுள்ளேன். ஏன் நாம் அந்த நிலைக்கு செல்ல முடியாது. ஆதலால் அரசாங்கம் எடுத்த இந்த முடிவை நான் பாராட்டுகிறேன்" என குறிப்பிட்டுள்ளார். (நி)

# அனைத்து அரசு ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு-அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)
அனைத்து அரச ஊழியர்களுக்கும் சரியான முறையின் கீழ் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என பொது சேவைக்கான பாராளுமன்ற துணைக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியராச்சி தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், அரச சேவையில் சம்பள உயர்வு தொடர்பான தேசிய கொள்கையை உருவாக்கும் செயல்முறையை அரசாங்கம் தொடங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தொழிற்சங்க பிரதிநிதிகளின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளில் குறிப்பிட்ட புள்ளிகள் இரண்டு வாரங்களுக்குள் உரிய அமைச்சிற்கு அனுப்பப்படும் என்று சந்தன சூரியராச்சி தெரிவித்துள்ளார்.

அமைச்சினால் உரிய கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் அவை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

பாராளுமன்றத்தில் ஆராய்ந்த பின்னர் உரிய முறைக்கமைய, அரை அரசாங்கம் உட்பட அனைத்து அரச ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து ஊழியர்களுக்கும் முறையாக மற்றும் சரியான முறையின் கீழ் சம்பள அதிகரிப்பு வழங்க எதிர்பார்க்கப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ளார். (நி)


## கடை வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி A9 வீதியில் (நுணாவில் மத்தி) முதலாம் மாடியில் சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 171 2877
(5412)

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மானிப்பாய் பிரதான வீதிக்கும் மிக அண்மையில் அமைந்துள்ள 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. காணி வாங்க விரும்புவோர் மட்டும் நேரடித் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 726 0194
(C-276)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் நகைக்கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
077 784 0379
(C-3870)

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத் தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்

தொடர்புகளுக்கு : 076 682 7368

No.139, Main Street, Jaffna
யாழ். நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)
(C-3871)

## வீடு வாடகைக்கு

மந்திகை வைத்தியசாலைக்கு அருகில் வல்லிபுர கோவிலுக்கு செல்லும் வீதி உபயகதிர்காம கோவிலடி பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. ஒரு வரவேற்பறை, மூன்று அறைகள், சமையலறை, கொமோட் பாத்ரூம் சுற்றிவர மதில், வாகனத்தரிப்பிட வசதி உண்டு. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

071 838 7393, 071 525 5268
(C-275)

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு Graphic designer, Type setting செய்வதற்கு வேலையாள் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
Rs 30,000 – 50,000 வரை சம்பளம் வழங்கப்படும்.
தொழில் தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
076 192 3444, 077 482 1912
(1548)

## காணி விற்பனைக்கு

வவுனியா தவசிக்குளத்தில் இரண்டு ஏக்கர் உறுதி காணி விற்பனைக்கு. 50 தென்னைகள், நான்கு மாமரம், இரண்டு அறைகள் கொண்ட வீடு மற்றும் பயன்தரும் மரங்களுடன் 22 அடி சுற்றளவு கொண்ட தோட்டக் கிணறும் உண்டு.

தொடர்புகளுக்கு:
076 776 0459, 077 628 8923
(C-3868)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி மறுவன்புலவு நல்ல விளைச்சல் உள்ள முதலியார் வயல் (சோழியன் வயல்) 64 1/2 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 301 3756
(C-274)

## பெண் ஊழியர்கள் தேவை

யாழில் புதிதாகத் திறக்கப்பட இருக்கும் இலங்கையின் முன்னணி நிறுவனமான UTC நிறுவனத்திற்கு பெண் ஊழியர்கள் தேவை. தமிழ் மற்றும் ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர்கள் அவசியம். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

01. Documentation Controller (Female)
02. Front office Executive (Female)

Please send your CV along with details to our email
Phone : 011 427 4110, 076 116 3355
Email : infoutclk@gmail.com
(1544)

## சிறந்த நிலம் விற்பனைக்கு!

- மீசாலை கிழக்கு – வீட்டு நிலம்
- அல்லாரை தெற்கு – வீட்டுடன் தென்னங்காணி
- கச்சாய் (புங்கடி) – வயல், தென்னங்காணி

விலை பேசத்தக்கது
தொடர்பு 0776 544 540
(C-273)

## Food Delivery வேலைவாய்ப்பு

மாதம் 100,000/- வருமானம். உங்களிடம் மோட்டார் சைக்கிள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இருந்தால் போதும். உடன் இணையலாம்.

Pickme jaffna-இல.210,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம் 077 473 7737
(C-271)



SPECIAL OFFER!!
Desktop Computer Full Set (Brand New)
(One year Warranty)
59990/=

CPU
- 500GB
- 4 GB
- Windows 11

- 19" Monitor
- Keyboard
- Mouse
- Mouse Pad
- Speaker



FREE- 4GB PENDRIVE

CONTACT
0212224865
0770633408

ST ANTONYS COMPUTER
189, KKS ROAD JAFFNA
(C-3864)

## வீட்டு பணிப்பெண் தேவை

நல்லூரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
077 221 2142
077 379 6961
(5403)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி உணவுக் களஞ்சியத்தின் மேற்கு வாசலுக்கு எதிராக அமிர்தா வீதியில் 40 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு:
074 140 0693
(5392)

## வாடகைக்கு

பருத்தித்துறை நகரின் மத்தியில் பிரதான வீதியில் தனியார், அரசசார்பற்ற நிறுவனங்கள் நடாத்துவதற்கான கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 756 1341, 077 129 8201
(5397)

## UBER சேவையில் வாகனம் இணைக்க

உங்களிடம் உள்ள முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், Car, Van ஆகிய வாகனம் இருப்பின் இணைத்து மாதம் 100,000/- க்கு மேல் சம்பாதிக்கலாம்

இல 197B, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்,
070 755 5755
(C-272)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போராட்டத்திற்கு ஆதரவாக இரு இளைஞர்கள் நடைபயணம்



(மன்னார்)

மன்னார் காற்றாலை போராட்டத்திற்கு ஆதரவாக முல்லைத்தீவு இளைஞர்கள் இருவர் மன்னார் நோக்கி நடை பயணத்தை ஆரம்பித்தனர்.

மன்னார் பகுதியில் அமைக்கப்பட உள்ள காற்றாலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்காலில் இருந்து இரண்டு இளைஞர்கள் நடை பயணம் ஒன்றை கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்தனர்.

அவர்கள் முல்லைத்தீவிலிருந்து கால்நடையாக செல்வதோடு துண்டுப்பிரசுரங்களை வீதி ஓரங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கி வந்தனர்.

இந்த நிலையில் குறித்த இரு இளைஞர்களும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மன்னார் தள்ளாடிச் சந்தியை வந்தடைந்தனர்.

இந்த நிலையில் குறித்த இரு இளைஞர்களையும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் நகரில் போராட்டத்தை முன்னெடுத்து வரும் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து வரவேற்றனர். (8-285)

# மங்கையருக்கான மகுடம் சூட்டும் விழா




(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தமிழ் டிஜிட்டல் வாழ்வியல் தளமான நாடி வழங்கும் "தமிழச்சி" எனும் அழகும் ஆற்றலும் படைத்த நம் தமிழ் மங்கையருக்கான மகுடம் சூட்டும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

தமிழச்சி என்பது இலங்கையில் வாழும் 20 முதல் 28 வயது வரையிலான தமிழ் பெண்களுக்கான ஒரு தனித்துவமான அழகுப்போட்டி. ஆனால் இது வெறும் அழகுப் போட்டியாக மட்டும் விளங்காமல் இளம் தமிழ் பெண்களின் தன்னம்பிக்கை, தனித்தன்மை, திறமைகள் மற்றும் ஆளுமையை வெளிப்படுத்தும் ஒரு மேடையாகவும் அமைகிறது. (3)

# பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகு மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில் வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராய் அருள்மிகு கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான ஈ.தயாரூபன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஷ் மற்றும் யாழ். மாவட்ட செயலகத்தின் உதவி மாவட்டச் செயலாளர் செல்வி. தர்சினி உருத்திரகோடீஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக சிரேஷ்ட கலசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணலினி விஜயரத்தினம் மற்றும் உரும்பிராய் மூத்த நடனக் கலைஞர் கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# இன்று 14.09.2025 - அளவெட்டி நாகவரதநாராயணர் தீர்த்தம்- திரு - ஞானம் பெறுவோம்





**மைவந்தகண்ணி மலருறைச் செல்வி**
**கை வந்து வருட கால்தந்த பகவா**
**ஜைமுந்து முன்னே அடிதந்து காப்பாய்**
**வைகுந்த நாக வரத நாராயணனே.**

விநாசித்தம்பி ஐயா அருள்வாக்கு மேற் கூறப்பட்ட ஒரு அருமையான அருள்மிகு நாகவரத நாராயணன் திருப்பாட்டை ஓதி நேற்று தேர்வடம் பிடித்தவர்கள் இன்று தீர்த்தம் ஆடி "திரு" அருள் பெற்று உய்வோம் இதை பட்டினத்தார் சித்தர் பாடலில்

**எண்ணரியநெஞ்சே! இனிய நற் பாலதனை**
**அன்னந்தண் ணீர் நீக்கியே யருந்து- தன்மைபோல்**
**துன்பங்களைந்து தூய வெளி யூநிருவாம்**
**இன்பங்களைச் சேர்ந் திரு.**

அன்னப் பறவை பாலில் கலந்த தண்ணீரில் பால் மட்டும் அருந்துவது போல் நாமும் துன்பம் களைந்து தூய வெளியில் இன்பங்களைச் சேர்ந்து இறைவன் அருளாகிய திருஞானம் பெற்று உய்வோம்.

இன்று ஆவணி மாதம் ஞாயிறு சூரிய வழிபாட்டு நாளில் நாகவரத நாராயணன் தாள் நெஞ்சில் போற்றி வணங்கி நற்கதி சேர்ந்திடும் கோளாரே. என இடைக் காட்டுச் சித்தர் பாடல்.

**சூரியன் வான்பட்ட துய்ய பனிகெடுந்**
**தோற்றம் போல் வெவ்வினை தூள்பட வே**
**நாரிஇடப் பாகம் தாள் நெஞ்சிற் போற்றியே**
**நிற்கதி சேர்ந்திடும் கோணாரே!**

முன்னர் ஐயாவின் காலத்தில் உலகம் பூராகவும் வந்து தங்களது துன்பங்களாக ஐயாவின் ஆசிர்வாதத்தால் நீக்கியதை இன்றும் பசுமையில் அவரது திருநீறு நெற்றியில் பரவி அணிந்து, அவர்களது சமாதியில் வணங்கியும், நாகவரத நாராயணன் அருள் பெற்றும் , அனேக அற்புதங்களை அநுபவிகளாகிய நாம் நிர் விகல்பமாய் ஜீவன் முத்தனாக மனம் வாக்குக் காயத்தால் மகான்களைப் போற்றுவதே நமது கருத்தாகும்.

சித்தர்கள். வாத்தியாய் ஐயா, திருமுறையாளர் அருள் வாக்கு சைவசின்னம் திருநீறு மூன்று விரல்களால் பரவி அணிந்ததம், வாய் திருமுறை பாடும் சேவி அருள் செல்வம் திருமுறைகள் கேட்டும் நெஞ்சில் எம்பெருமானுடன் திருவடி மலரும், சித்தத்தில் சிவமாக்கும், மனதில் இறைவன் அருட் பெருஞ் சோதியாகும்.

இத்துடன் வரும் திருப்பாக்களை அன்பர்களது கைபட எழுதி தினம். ஓதியும், திருமுறைகள் ஓதியும் மாயாவாதியர் மோட்சம். சரீர தொந்தனையிட்டு நிற்கிற சிவாத்மாவிற்கு விவேக ஞானம் உண்டாகிறதே. மோட்சம் என்பர் ஞானத்தால் விவகாராதி சமுசார பந்த நிவர்த்தியே மோட்சம் என்பார்கள்.



க.கு.க.சிவபாலன்
போசகர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.

(C-3866)

# இராசிபலன்

14.09.2025
ஆவணி 29, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி முற்பகல் 9.18 மணிவரை

ரோகிணி பிற்பகல் 1.25 மணிவரை
சுப நேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை

மத்தியாஷ்டமி
சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்

வளவன்




தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.




புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.




உறவினர்கள் நண்பர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.




அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, விட்டுக் கொடுத்து செல்வதால் முன்னேற்றம் கிடைக்கும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.




இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




பொதுவாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலன் சீராகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




உறவினர் வழியில் ஆதரவு பெருகும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

தன்னம்பிக்கையுடன் உழைத்தால் வெற்றி நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 510
14.09.2025


# “மீண்டும் எழுவேன்” யாருக்கான எச்சரிக்கை?



“மூன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தமது உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறினர்.”

அபிமன்யு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தலின் போது மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறிதிக்கமையவே முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் வெளியேறிய நிலையில் மகிந்த ராஜபக்ஷ வெளியேறிய விடயம் மட்டும் பேசுபொருளாகியிருக்கிறது.

இதற்குக் காரணம் மகிந்த ராஜபக்ஷ பயங்கரவாதத்தை இந்த நாட்டிலிருந்து இல்லாதொழித்தவர். அவர் வரலாற்று நாயகன். அவரை அங்கிருந்து அரசாங்கம் வெளியேற்றியது தவறு என அவரின் ஆதரவாளர்கள் குறித்த விடயத்தைத் திசை திருப்ப முனைகின்றனர்.

மக்களின் வரிப்பணத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்த நிலையில் இவற்றைக் கருத்திற்கொள்ளாமல் மகிந்தவை வரலாற்று நாயகன் என்று புகழ்வது ஏற்புடையதல்ல என அரசதரப்பு கூறிவருகிறது.

கடந்த வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஜேராமவில் அமைந்துள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறி தங்காலையிலுள்ள கால்டன் இல்லத்திற்குச் சென்றிருந்தார்.

அங்கு மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பலர் ஒன்றுகூடி மகிந்தவையும் அவரது மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவையும் சிறப்பாக வரவேற்றதுடன் தமது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

குறித்த விடயத்தினை மகிந்த தரப்பு அரசியலாக்க முனைகின்றமை. அவர்களின் பேச்சுக்களிலிருந்து புலனாகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் மகிந்தவை வெளியேற்றியதற்கு மகிழ்ச்சியடைந்திருப்பார் என மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தனது இல்லத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்தே அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும் போது, சட்டத்திற்கு மதிப்பளித்து மகிந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறியிருக்கிறார்.

30 வருட போரை நிறைவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டிய தலைவருக்கு அரசாங்கம் நல்ல கௌரவத்தைக் கொடுத்துள்ளது.

சிங்கம் எங்கிருந்தாலும் சிங்கம்தான் என அவர் கூறிய கருத்து நிச்சயம் மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியே தீரும். இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷ தான் அரசியலை ஒருபோதும் கைவிடப்போவதில்லை எனத் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, மக்கள் நலனுக்காக தான் ஓயப்போவதில்லை என்றும் அரசியலில் இருந்து ஓய்வுபெற மாட்டேன் “மீண்டும் எழுவேன்” என்றும் தெரிவித்திருந்தமை அரசுக்கு அச்சுறுத்தல் விடுவதாக அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளை அழித்த தலைவர்கள் என தம்மைச் சொல்லிக் கொள்ளும் ராஜபக்ஷக்கள் போரின் போது கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் தொடர்பில் இம்மியும் சிந்திக்காமல் இருப்பது வேதனையளிக்கும் செயல்.

தேசிய மக்கள் சக்தி அரசு வழங்கிய தேர்தல் வாக்குறுதியில் முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்கள் குறைக்கப்படும் என்ற வாக்குறுதிக்கமைவாக இவர்கள் இப்போது வெளியேற்றப்பட்ட நிலையில், மீண்டும் போர் வெற்றி, பயங்கரவாத அழிப்பு, வெற்றி நாயகன் என மக்களை குழப்பும் செயலை எவர் செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்விடத்தில் சிங்கள மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற்றியமை மீண்டும் பயங்கரவாதத்தை உயிர்பெறச் செய்யும் என்ற போலிகளை சிங்கள மக்கள் நம்புவார்களாயின் நிச்சயம் மீண்டும் இருண்ட யுகத்துக்குள் நாம் செல்லவேண்டி வரும் என்பதை மறந்துவிடக் கூடாது.

போர் என்ற அரக்கனின் கொடும்பிடியில் சிக்கிச் சின்னாபின்னமானவர்கள் தமிழ் மக்கள்.

போரின் கொடுமையையும் அதன் வலியையும் நன்குணர்ந்தவர்கள் தமிழ் மக்கள். போரின் வடுக்களை இன்றுவரை உடலிலும் மனதிலும் சுமந்து கொண்டிருப்பவர்கள் தமிழ் மக்கள்.

போரினால் தமது நிலத்தையும் வளத்தையும் இழந்து நிர்கதியாய் நிற்பவர்கள் தமிழ் மக்கள்.

தமது வரலாறுகள் அத்தனையும் சிதைக்கப்பட எதிர்காலத் திடம் கையளிக்க எதுவுமே இல்லாமல் கையறு நிலையில் நிற்பவர்கள்தான் தமிழ் மக்கள்.

இவ்வாறான நிலையில் மீண்டும் போரைத் தோற்றுவிக்கவும் இனவாதத்தை விதைக்கவும் மதவாதத்தினூடாக இருண்ட யுகத்திற்குள் மூழ்கவும் சிங்கள மக்கள் எவருக்கும் இடம்கொடுக்கக்கூடாது.

யார் தவறிழைத்தனரோ அவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டியவர்களே, இதில் எந்தத் தளம்பலும் வந்துவிடக்கூடாது.

சிலர் தமது அரசியல் ஆதாயங்களுக்காக நாட்டைக் குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவது நன்கு தெரிகிறது.

இவ்வாறான தூண்டல்களுக்கு சிங்கள மக்கள் துலங்குவார்களாக இருந்தால் இந்த நாட்டை எவராலும் காப்பாற்ற இயலாது என்ற முடிவே கிடைக்கும்.

பாராளுமன்றினூடாக சட்டங்களை உருவாக்கி அதனூடாக தேசிய மக்கள் சக்தி அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறது.

இதைச் சட்டத்தினூடாகவோ அல்லது அரசியல் மீள் எழுச்சியினூடாகவோ முறியடிக்க வேண்டுமே தவிர, மீண்டும் பயங்கரவாதம் தோற்றுவிக்கப்படுகிறது. வெற்றி நாயகர்கள் அவமதிக்கப்படுகிறார்கள் எனும் அனுதாப அலைகளை ஏற்படுத்தி சிங்கள மக்களைக் குழப்பி, அதனூடாக நாட்டைக் குழப்ப முற்படக்கூடாது.

அண்மையில் மிகப்பெரிய ஐஸ் போதைப்பொருள் மையம் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அங்கு பல்லாயிரக்கணக்கான கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுக்கான மூலப்பொருள் கைப்பற்றப்பட்டமை உலக நாடுகளை இலங்கை தொடர்பில் அச்சமடையச் செய்துள்ளது.

குறித்த நிலையத்தை நடத்தியவர் எனச் சந்தேகிக்கப்படுபவர் பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர் என்ற பொலிஸாரின் கருத்தை நிராகரித்த நாமல் ராஜபக்ஷ அவர் ஏலவே எமது கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார் எனத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான ஒரு விடயம் விசாரணைக்குட்படுத்தப்படும் நிலையில் அது மிகப்பெரிய வலையமைப்பை சிக்க வைக்கும்.

இந்த நேரத்தில் மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்ல விடயம் மேலெழுந்தால் அது போதைப்பொருள் விடயத்தை மழுங்கடிக்க வாய்ப்புகள் அதிகம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றனர்.

அரசாங்கத்தின் கோரிக்கைகளை ஏற்று முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் தமது உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறிய நிலையில், மகிந்த ராஜபக்ஷவை மட்டும் முன்னிலைப்படுத்துவது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது?

இந்த நேரத்தில் நாட்டு மக்கள் அனைவரும் எது உண்மை, எது பொய் என்பதை பிரித்தறிந்து அதன் வழி நடப்பதே நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். மிகச் சிறந்த தமிழ் ஆசிரியர் சாவகச்சேரி த.நாகேஸ்வரன் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

தமிழ் மீது அதீத பற்றுக் கொண்ட ஆசிரியர் நாகேஸ்வரன் தென்மராட்சி இலக்கிய அணியின் பணிக்கு அச்சாணியாக இருந்தவர்.

பட்டிமன்றப் பேச்சுக்களிலும் கவியரங்குகளிலும் தன் ஆற்றலை வெளிப்படுத்தி மாணவ சமுகத்திற்கு வழிகாட்டியவர்.


அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலீ செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்பதை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் கூட்டாக வலியுறுத்த வேணும்.

இந்த வலியுறுத்தல் அநுரவின் அரசாங்கத்திற்கு எதிரானதல்ல. மாறாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கானது.

எனவே செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச ஆய்வுகளும் விசாரணைகளும் தேவை என்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு பெரும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.



த.நாகேஸ்வரன்
தமிழ் ஆசிரியர் சாவகச்சேரி

அதனை நோக்கி ஊடகவியலாளர்கள், பத்தி எழுத்தாளர்கள் தங்களின் பணியை ஆற்ற வேணும்.


**பண்டிதர்:-** விதானையார் சொல்லுறது தான் சரி. ஆனால் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை வைத்துக் கொண்டு சிலர் செம்மணிச் சந்தியில உள்ள சிவலிங்கத்தை அகற்றுவதற்கெல்லோ முயற்சி செய்கினம்.

செம்மணியில சிவலிங்கம் நிறுவப்பட்ட போது, அந்த இடம் அகழ்ந்து அதில தான் சிவலிங்கத்திற்கான பீடம் அமைக்கப்பட்டது.

எல்லோரும் காணக் கூடிய அந்த இடத்தை அகழ்ந்த போது எந்த வித்தியாசங்களும் அங்க இருக்கல்ல. ஆனால் இப்ப சைவ சமயத்திற்கு எதிரான சில மதவாதிகள்; ஆன்மிகவாதி ஒருவருக்கு அரச செல்வாக்கால அந்தக் காணி கிடைத்ததாக கருத்துருவாக்கம் செய்து, அதில இருக்கிற சிவலிங்கத்தை எப்படியும் அகற்ற வேணும் எண்டு திட்டம் போடுகினம்.

**கங்காணி:-** பார்த்தியளோ செம்மணி மனிதப் புதைகுழியை வைத்துக் கொண்டு, செம்மணியில உள்ள சிவலிங்கத்தை அகற்றத்திட்டம் தீட்டுகினம்.

உண்மையில இந்த நேரத்தில செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்படுகின்ற மனித எலும்புக்கூடுகளை அடையாளப்படுத்த வேணும். அது தான் மிகவும் முக்கியமானது. அந்த அடையாளப்படுத்தலுக்கான நடவடிக்கைகளை நீதிமன்றம் செய்தாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய நாங்கள் அதற்காகக் குரல் கொடுக்க வேணும்.



## சைவ சமயத்தை வேரறுக்க நடக்குது பெரும் சதி முயற்சி

**சாத்திரியார்:-** ஏன் பண்டிதர் ஐயா! செம்மணியில சிவலிங்கம் வைத்த இடத்தை, மனிதப் புதைகுழி உள்ள இடம் போல சித்திரிக்கிறவர்கள், செம்மணி இராணுவ முகாமின் கட்டுப்பாட்டிற்குள்ள இருந்த மிகப் பெரிய வயல் நிலப்பரப்பு நிரவப்பட்டு அங்க இரண்டு தேவாலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில இருந்த- இப்போது செம்மணி மனிதப் புதைகுழிகள் இருந்த இடத்திற்கு அண்மையில மிகப் பரந்த நிலப்பரப்பில தேவாலயம் அமையப் பெற்றதன் பின்னணியில மனிதப் புதைகுழிகளை மூடி மறைப்பதற்கான ஏற்பாட்டை மதமாற்றிகள் மூலம் அரசாங்கம் செய்தது எண்டு ஏன் கருதக் கூடாது.

தவிர, தமிழ் மக்கள் மீது அதீத அக்கறை கொண்டவர்கள் அது பற்றிப் பிரஸ்தாபிக்காததற்குள் அவர்களிடம் மதவாதக் கிரந்தம் முற்றிப் பழுத்திருக்குதோ.

**சிறாப்பர்:-** அது மட்டுமல்ல, செம்மணி மனிதப் புதைகுழி அமைந்த- இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த வயல் நிலங்களை நிரவி தேவாலயம் அமைத்தது எப்படி? வயல் நிலங்களை நிரவி கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தது யார்?

ஆக, சைவ சமயத்திற்கு ஒரு சிறு நிலத்துண்டை அரசாங்கம் வழங்கினால், அதற்குள் உள்நோக்கம்- சதித்திட்டம் இருக்குது எண்டு சொல்லுகினம்.அப்படிச் சொல்வதைச் சிலர் ஆமோதிக்கினம்.

ஆனால் வடக்கின் ஆளுநராக இருந்த ஒருவர் மன்னாரில எவ்வளவு அரச காணிகளை ஒரு மதத்திற்குத் தாரை வார்த்திருந்தார். ஆனால் அது பற்றியெல்லாம் கதைப்பதற்கு இங்கு ஒருவரும் இல்லை.

மாறாக, செம்மணியில ஒரு சிவலிங்கம் வைத்தால் - எங்கள் தமிழ் மன்னன் சங்கிலியனுக்கு நினைவாக ஒரு கட்டிடத்தைக் கட்ட முற்பட்டால், அதனை ஏதோவொரு வகையில தடுத்து நிறுத்த வேணும் எண்ட மதவக்கிரத்தோட செயற்படுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

அதோட அத்தகைய காரியங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரவும் மாட்டாது.

**வாத்தியார்:-** நீங்கள் என்னதான் சொன்னாலும் சைவ சமயம் உயிர்ப்போட இருப்பதை இங்க இருக்கிற மதவாதிகள் ஒரு போதும் விடமாட்டினம்.

தமிழ்த் தேசியம் என்ற கோசத்தை முன்வைத்து, அந்தக் கோசத்துக்குள் சைவ சமயத்தின்ர மூச்சை அடைத்து விடுகிற செயற்பாடுகள் தான் கனகச்சிதமாக நடக்குது.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில இருந்து வெளியேறிய போது, எங்கட சைவ சமய சிவாச்சாரியார்கள் முட்கம்பிவேலிக்குள்ள அடைக்கப்பட்டுக்கிடந்தினம்.

ஆனால் அதே நேரம் இன்னொரு மதம் சார்ந்த குருமாருக்கு இராணுவம் விருந்து கொடுத்து வரவேற்றது.அதெல்லாம் மறைந்து போயிற்றுது.

இது போல ஒரு ஐயர் அரச தரப்புச் சார்ந்த ஒருவருக்கு காளாஞ்சி கொடுத்தால் அது துரோகம்.

அதேநேரம் இன்னொரு மதத்தின் குருமார் இராணுவக் கட்டளைத் தளபதிக்கு பாராட்டு விழா வைத்தால் அது பற்றி எவரும் பேசப்படமாட்டினம்.இது தான் இங்க உள்ள நிலைமை.

ஆனாலும் ஒண்டு சொல்லுறன் சைவம் அழிந்தால் தமிழ் அழியும்.இது தான் உண்மை.

அதால தான் தனிநாயகம் அடிகளார் போன்றோர் சைவ சமயத் திருமுறைகளை போற்றினர். என்ன செய்வது நடுநிலை இல்லாத - மனச்சாட்சி இல்லாதவர்களின் கைகளில் ஏறிய பேனாக்களும் அத்தகையவர்களுக்குக் கிடைத்த உயர் பதவிகளும் சைவ சமயத்தைக் கருவறுக்கிற வேலையைத் தான் செய்யுது.

ஆனால் ஒண்டை மட்டும் நினைக்க வேணும். நாங்கள் மத பேதமையை விட்டு தமிழால்-தமிழனாக ஒன்றுபட வேணும். இதை வலியுறுத்துவது தான் ஒரேவழி.

இவ்வாறு வாத்தியார் நீண்ட உரையாற்ற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்க நினைத்த ஆட்சியாளர்கள்

# வெகுண்டெழுந்த ஜென் ஞு கிட்ஸ்



நேபாளத்தில், ஆட்சியாளர்களுக்கு எதிராக மிகப்பெரிய புரட்சிப் போராட்டம் வெடித்திருக்கிறது. அமைதியாக அரசை எதிர்த்து போராடிய மாணவர்களுக்கு எதிராக, அரச பயங்கரவாதத்தைக் காவல்துறை மூலம் ஆட்சியாளர்கள் ஏவிவிட, போராட்டக்களம் வன்முறைக் காடாகியிருக்கிறது!

**உச்ச நீதிமன்ற உத்தரவும்... அரசின் சூழ்ச்சியும்!**

யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலிச் செய்திகளைத் தடுக்கக் கோரி, நேபாள உச்ச நீதிமன்றத்தில் போடப்பட்ட சில பொதுநல வழக்குகளை ஒருசேர விசாரித்த நீதிபதிகள், கட்டுப்பாடற்ற சமூக வலைத்தளங்கள் போலியான செய்திகளை வெளியிடுவதும், தவறான தகவல்களைப் பரப்பி மக்களின் நம்பிக்கையைச் சீர்குலைப்பதும் நாட்டுக்கு ஆபத்தாக அமைந்து விடும். எனவே, உள்நாட்டு, வெளிநாட்டு சமூக வலைத்தள நிறுவனங்கள் அனைத்தும் அரசாங்கத்தில் பதிவுசெய்து கொள்ள வேண்டும் அதற்கான வரைமுறையை அரசு உருவாக்க வேண்டும். சமூக வலைத்தளங்களைக் கண்காணிக்கத் தனிக்குழு ஒன்றையும் அரசு ஏற்படுத்த வேண்டும்" என்று ஒகஸ்ட் 16 ஆம் திகதி உத்தரவிட்டது.

இந்த உத்தரவை முன்வைத்து, அமைச்சரவையைக் கூட்டி நேபாள அரசு சில முடிவுகளை எடுத்தது. 'ஆகஸ்ட் 28 ஆம் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக, சமூக வலைத்தளங்கள் அனைத்தும் அரசாங்கத்தில் பதிவுசெய்ய வேண்டும். பதிவுசெய்யப்படாத, சமூக வலைத்தள நிறுவனங்களின் செயலிகள் நேபாளத்தில் தடை செய்யப்படும்' என அறிவித்தது அரசு.

"சமூக வலைத்தளங்களைத் தடைசெய்ய வேண்டும் என்ற நோக்குடன், நிறுவனங்கள் பதிவு செய்வதற்கான விதிகளைக் கடினமாக உருவாக்கியதுடன், வெறும் ஏழு நாள் மட்டுமே கால அவகாசமளித்து சூழ்ச்சி செய்கிறது அரசு" என்ற குற்றச்சாட்டுகள் கிளம்பின. குற்றச்சாட்டுகளைக் காதில் வாங்கிக்கொள்ளாத அரசு, ஏழு நாட்கள் முடிந்தவுடன் ஃபேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், யூடியூப், எக்ஸ் உள்ளிட்ட 26 சமூக வலைத்தளச் செயலிகளைத் தடை செய்தது.

செப்ரெம்பர் 5, 6 திகதிகளில் நாடு முழுவதும் இந்தத் தடை அமுலானது. இதனால் கொந்தளித்த ஜென் ஞு (1996-2010 இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்கள்) இளைஞர்கள், அரசுக்கு எதிராகக் களமிறங்கினர்.

**தடை உத்தரவின் பின்னணியும்... இளைஞர்களின் எழுச்சியும்!**

சமூக வலைத்தளங்களை அவசர அவசரமாக அரசு தடை செய்ததன் பின்னணியை விவரிக்கும் நேபாள பத்திரிகையாளர்கள், பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான நேபாள அரசுக்குப் பெரும் தலை வலியாக இருந்தது சமூக வலைத்தளங்கள்தாம். அங்கு அரசுக்கு எதிராக இளைஞர்கள் பலரும் கேள்வி கேட்கத் தொடங்கினர். குறிப்பாக, 'நெப்போ கிட்' என்றொரு பிரசாரத்தைச் சில காலமாகவே இளைஞர்கள் சமூக வலைத்தளங்களில் முன்னெடுத்திருந்தனர். அதாவது, முன்னாள், இந்நாள் பிரதமர்கள், அமைச்சர்களின் வாரிசுகள் மட்டும் எப்படிச் சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள்... அவர்களுக்கு எங்கிருந்து வந்தது இவ்வளவு பணம்... எல்லாம் நம்மிடையே கொள்ளையடித்த பணம்தான். ஊழல்வாதிகளை நாட்டைவிட்டு அகற்றினால் மட்டுமே மக்களுக்குக் கிடைக்கவேண்டியது கிடைக்கும் என்பதுதான் 'நெப்போ கிட்' பிரசாரத்தின் அடித்தளம்.

பெரிய பெரிய ஊடகங்களையெல்லாம் அரசுக்குச் சாதகமாக மாறிவிட்டதால், சமூக வலைத்தளங்களைத் தங்களது ஆயுதமாக மாற்றினார்கள் இளைஞர்கள். அங்கு, அரசியல் தலைவர்களின் வாரிசுகள் வாழும் ஆடம்பர வாழ்க்கை தொடர்பான புகைப்படங்களைப் பகிர்ந்து, ஆட்சியாளர்களை நோக்கி இளைஞர்கள் எழுப்பிய கேள்விகளை அரசு விரும்பவில்லை

தங்களது குரலை ஒடுக்கவே அரசு இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக உணர்ந்த இளைஞர்கள், வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினர். செப்ரெம்பர் 8ஆம் திகதி, தலைநகர் காத்மண்டு உட்பட பல்வேறு நகரங்களிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் களமிறங்கினர். 'ஊழலுக்கு எதிராக இளைஞர்கள்', 'எங்கள் வரி உங்கள் செல்வமா?!' என்ற முழக்கங்களுடன், அரசுக்கு எதிரான பதாகைகளை ஏந்தி அமைதியாகப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

**அரசின் சர்வாதிகாரமும்... வெகுண்டெழுந்த இளைஞர்களும்!**

காவல்துறையைக்கொண்டு இந்தப் போராட்டத்தை ஒடுக்க நினைத்தது அரசு. போராட்டக்காரர்கள்மீது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சுமார் 20 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து, அரசு நினைத்துப் பார்க்க முடியாத வகையில் போராட்டம் பெரிதானது. லட்சக்கணக்கான இளைஞர்கள் நாடு முழுவதும் போராடத் தொடங்கினர். பாராளுமன்றம், அரசு அலுவலகங்கள், முன்னாள், இந்நாள் ஆட்சியாளர்களின் வீடுகள் உள்ளிட்டவை போராட்டக்காரர்களால் தீவைக்கப்பட்டன.

நிதியமைச்சர் பிஷ்ணு பிரசாத்தைப் போராட்டக்காரர்கள் காத்மண்டு சாலையில் விரட்டி விரட்டி அடிக்கும் காட்சிகள் சமூக வலைத் தளங்களில் வெளியாகியிருக்கின்றன. முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் வீட்டில் நுழைந்து, அவரைக் கடுமையாகப் போராட்டக்காரர்கள் தாக்கினர். அதேபோல, முன்னாள் பிரதமர் ஜலா நாத் கனல் வீட்டில் வைக்கப்பட்ட தீயில் சிக்கி, அவரின் மனைவி ராஜ்யலஷ்மி பரிதாபமாக உயிரிழந்த சம்பவமும் நடந்தது. நேபாளத்தின் சுந்தாரா, ஜும்கா உள்ளிட்ட சில சிறைச்சாலைகளிலும் போராட்டக்காரர்கள் புகுந்ததால், சுமார் 13,500 கைதிகள் தப்பிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

போராட்டத்தின் வீரியத்தை உணர்ந்து, உடனடியாகச் சமூக வலைத்தளத் தடையை நீக்கியதோடு, தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார் சர்மா ஒலி. ஆட்சியைக் கையிலெடுத்துக் கொண்ட இராணுவம்,இளைஞர்கள் போராட்டத்தைக் கைவிட்டு, அமைதி காக்க' வலியுறுத்தியது.

தடை நீக்கப்பட்டவுடன் இளைஞர்கள் கலைந்து சென்றுவிடுவார்கள் என்று நினைத்தது அரசு. ஆனால் போராடும் இளைஞர்களோ, சமூக வலைத்தளத் தடைக்காக நாங்கள் போராட வரவில்லை. எங்கள் வாழ்வாதாரத்துக்காகப் போராடிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் கட்டும் வரிப் பணத்தைக்கொண்டு அரசியல்வாதிகள் தங்கள் வளத்தை மட்டுமே பெருக்கிக்கொள்கின்றனர். எனவேதான், நேபாளத்தில் எந்த வளர்ச்சியும் இல்லை... வேலைவாய்ப்பும் இல்லை. சுமார் 3 கோடி மக்கள் தொகை கொண்ட நேபாளத்தில், 60 லட்சம் பேர் வேலைக்காக வெளிநாட்டில் வசிக்கும் சூழல் நிலவுகிறது. எங்களுக்கு முந்தைய தலைமுறையினர், அரபு நாடுகள், மலேசியா, தென்கொரியா, இந்தியா எனக் குடும்பங்களைப் பிரிந்து வெளிநாடுகளில் வேலை செய்யும் சூழல் உருவாகியிருக்கிறது. அதே நிலை, எங்கள் தலை முறைக்கும் வந்துவிடக் கூடாது என்றே போராடுகிறோம். தற்போதைய ஆட்சியாளர்கள் பதவி விலக வேண்டும்.

இதற்கு முன்பாக ஆட்சியிலிருந்து கொள்ளையடித்தவர்கள் இனி அதிகாரத்துக்கு வரக் கூடாது. புதியவர்கள் வந்து நல்லாட்சி தர வேண்டும்... நாட்டில் ஜனநாயகத்தையும், சரிந்துகிடக்கும் பொருளாதாரத்தையும் மீட்டெடுக்க வேண்டும். அதேநேரம், போராட்டத்தில் கலந்துகொண்ட சிலர் தவறான எண்ணத்தோடு தீவிர வன்முறையைக் கையிலெடுத்திருப்பது எங்களுக்குக் கவலையளிக்கிறது என்கின்றனர் தெளிவுடன்.

**பிரதமர் ரேஸில் இருவர்!**

முன்னாள், இந்நாள் ஆட்சியாளர்கள்மீது மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதால், நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில், 'நாட்டின் அடுத்த பிரதமராக யார் பொறுப்பேற்கப் போகிறார்?' என்ற விவாதம் நேபாளத்தில் கிளம்பியிருக்கிறது. அதில், இருவரின் பெயர்கள் மட்டும் அதிகமாக அடிபடுகின்றன.

மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்து, சர்வாதிகாரப் போக்கைக் கையிலெடுத்து, ஊழலில் திளைத்து, ஜனநாயகத்தை அழித்து ஆட்சி நடத்துபவர்கள், மக்களால் இப்படித்தான் விரட்டியடிக்கப்படுவார்கள் என்பதை இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை, வங்க தேசத்தைத் தொடர்ந்து நேபாளமும் உரக்கச் சொல்லியிருக்கிறது!

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: வல்லவனுக்கு வல்லவன்
இசை: வேதா
பாடல்: கவியரசு கண்ணதாசன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்



நூறுமுறை பிறந்தாலும்
நூறுமுறை இறந்தாலும்
உனைப் பிரிந்து வெகுதூரம் – நான்
ஒருநாளும் போவதில்லை
உலகத்தின் கண்களிலே
உருவங்கள் மறைந்தாலும்
ஒன்றான உள்ளங்கள்
ஒருநாளும் மறைவதில்லை!

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

இந்த மானிடக் காதலெல்லாம்
ஒரு மரணத்தில் மாறி விடும்
அந்த மலர்களின் வாசமெல்லாம்
ஒரு மாலைக்குள் வாடி விடும்
நம் காதலின் தீபம் மட்டும்
எந்த நாளிலும் கூட வரும்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

இந்த காற்றினில் நான் கலந்தேன்
உன் கண்களை தழுவுகின்றேன்
இந்த ஆற்றினில் ஓடுகின்றேன்
உன் ஆடையில் ஆடுகின்றேன்
நான் போகின்ற பாதையெல்லாம்
உன் பூமுகம் காணுகின்றேன்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

# நோபல் பரிசிற்கு தகுதியானவரா ட்ரம்ப்...?

இன்று இந்த உலகில் நாளுக்கு நாள் அதிரடியாக மாறிவரும் அரசியல் மாற்றங்கள் இனி ஒரு போருக்கு வாய்ப்பில்லை என்பதையே காட்டி நிற்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இவர் விரும்பியோ விரும்பாமலோ உலக நாடுகள்மீது விதித்த வரிவிதிப்புகள், தான்தோன்றித்தனமாக எடுத்த வேறு பல நடவடிக்கைகள் இந்த உலகம் ஒருமித்து பயணித்தால்தான் அமைதியாக வாழமுடியும் என்ற முடிவிற்கு வந்துள்ளது.

ட்ரம்பின் இந்த நடவடிக்கைகளுக்காக, அவர் விரும்பிய நோபல் பரிசை பெறுவதற்கு இந்த உலகம் சிபாரிசு செய்ய வேண்டும் என்பதே எனது அவா! ஏனென்றால் அமெரிக்காவானது இந்த உலக ஆதிக்கம் தனது அதிகாரத்தின் கீழ் இருக்க வேண்டும் என்று நினைக்கும் ஒரு நாடு. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் மீது அணுகுண்டு வீசி உலகைப் பயப்படுத்தி தனது அதிகாரத்திற்குள் கட்டுப்பட வைத்திருந்தது அமெரிக்கா. அன்று அமெரிக்கா மட்டுமே அணு ஆயுத வல்லரசாக இருந்தது.

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை தேவை என்பதுபோல் அன்றைய சோவியத் ரஷ்யா அணுகுண்டு தயாரித்து உலகை சமநிலைப்படுத்தியது. இதைத் தாங்கிக் கொள்ள முடியாத அமெரிக்கா, ஏலவே நான் 'பாகிஸ்தான் பக்கம் திரும்பும் கழுகின் பார்வை' என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டதுபோல் சோவியத் குடும்பத்தை சதிசெய்து குலைத்தது.

சோவியத் யூனியன் வீழ்ச்சிக்கு ஆப்கானிஸ்தான் போரில் ரஷ்ய சோவியத் யூனியனுக்கு ஏற்பட்ட பின்னடைவு அதனால் ஏற்பட்ட பாரிய பொருளாதார இழப்பும் முக்கிய காரணம். இதே பாதையில் ஏகபோக அதிகாரத்தின் முதல்வனாக தான்மட்டுமே இருக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் ஆசை. இதன் காரணத்திற்காகத்தான் உக்ரைனுக்கு நேட்டோவில் இடம் தருவதாக கூறி உக்ரைன் ரஷ்ய போரை தொடக்கி வைத்தது அமெரிக்கா.

உண்மையில் உக்ரைனைக் கைப்பற்றுவது என்பது ரஷ்யாவிற்கு பெரிய காரியமில்லை. ஒன்று, இரண்டு கிழமைகள் போதும் உக்ரைனை ரஷ்யா முழுமையாக கைப்பற்றிவிடும். ஆனால் ரஷ்யாவின் நோக்கம் அதுவல்ல. உக்ரைனை வைத்து ஆட்டம் காட்டும் அமெரிக்காவிற்கு ஆட்டம் காட்ட வேண்டும் என்று நினைத்தது ரஷ்யா. அதனால்தான் போரை நீடித்தது. ரஷ்யா நினைத்ததுதான் நடந்து கொண் டிருக்கின்றது.

ரஷ்ய- உக்ரைன் போரின் ஆரம்ப கட்டத்திலிருந்தே உக்ரைனுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்றும் ஆதரவு கொடுக்கக் கூடாது என்றும் இருவேறு கருத்துக்களுடன் நேட்டோ நாடுகளுக்குள் முரண்பாடுகள் நிலவி வந்தன. தற்போது அது இன்னும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. காரணம் அமெரிக்காவின் உலக நாடுகள் மீதான வரிக்கொள்கை.

பனிப்போரின் பின் தனிக்கடை நடத்திவந்த அமெரிக்காவிற்கு 'பிரிக்ஸ்' நாடுகள் போன்ற எதிர்க்கடை இயங்குவது பிடிக்கவில்லை. வரியை போட்டு ரஷ்யாவோடு சேர்ந்த 'பிரிக்ஸ்' நாடுகளை அடிபணிய வைக்க முயன்றார் ட்ரம்ப்.

ஏற்கனவே அமெரிக்காவை ஆட்சி செய்த ஜனாதிபதிகள், அமெரிக்காவின் 'தனி ஏகாதிபத்திய கொள்கையை' மெதுமெதுவாக வழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் ட்ரம்ப் தங்களுடைய கொள்கையை வெளிப்படையாக காட்டி, தன்னுடைய கூட்டாளி நாடுகளையே உடைத்தெறிந்து விட்டார். ட்ரம்பின் இந்த நடவடிக்கையால் அணிசேராக் கொள்கையை கடைப்பிடிக்கும் ஜனநாயக நாடான இந்தியா இந்த உலகத்திற்கு தலைமை தாங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ட்ரம்பின் நடவடிக்கைகளால் **இந்திய, ரஷ்ய உறவு எந்தக் காலமும் பிரிக்க முடியாத அளவிற்கு ஆழமாக்கப்பட்டுள்ளது. நீண்டகால பகை நாடுகளான இந்தியா சீனா உறவுகள் பலமடைந்துள்ளன; ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்திப்பதற்கு செல்லவிருந்த இந்தியப் பிரதமர் மோடியிடம், உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி ரெலி போனில் கலந்துரையாடியது, ஜேர்மனி தாங்கள் இந்திய அணி என்று கூறியது, அவுஸ்திரேலியா தங்களுக்கு இந்தியாவும் முக்கியம் என்று கூறியது. பின்லாந்து இந்தியா மீது அமெரிக்கா வரி விதித்தது பிழையான செயற்பாடு என்று அமெரிக்காவிற்கு எதிராக குரல் கொடுத்தது. பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகள் வர்த்தகம் பாதுகாப்பு போன்ற துறைகளில் இந்தியாவுடன் சேர்ந்து பயணிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டது. தங்களுக்காக இந்தியாவிடம் கதைக்கும் படி பாகிஸ்தான் சீனாவிடம் கேட்டுக்கொண்டது.**

மேலும் இருபத்தி ஐந்து நாடுகளுக்குமேல் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. உலகம் போகிற போக்கைப் பார்த்தால் சீனாவைப்போல், பாகிஸ்தானும் இந்தியாவுடன் கைகோர்க்கும் நிலைமை உருவாகலாம்.மேற்கூறியவற்றை நோக்கும்போது உலக தலைமைத்துவம் இந்தியா நோக்கி செல்வதை அவதானிக்க முடிகின்றது. மேலும் ஜனாதிபதி டொனால் ட்ரம்பின் செயற்பாடுகளால் அமெரிக்கா தனித்துவிடப்பட்டுள்ளது என்பதை அமெரிக்கா மக்கள் உணர்ந்துவிட்டனர். அதனால்தான் ட்ரம்பிற்கு எதிராக அமெரிக்க மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட தொடங்கிவிட்டார்கள். எலான் மஸ்க் போன்ற தொழிலதிபர்கள் அரசியல்வாதிகள் எனப்பலர் ட்ரம்பின் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றார்கள்.ட்ரம்ப் ஓய்வெடுக்கப் போகின்றார் நான் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்கப்போகின்றேன்" என்று அமெரிக்க துணை ஜனாதிபதியாக செயல்படும் JD.வாஷ்ஸ் கூறியிருக்கின்றார். இந்தக் கூற்று சாதாரணமானதன்று. இவைகளையெல்லாம் பார்க்கும்போது அமெரிக்க நிர்வாகம் குழம்பிவிட்டது என்பது வெளிப்படை.

எனவே இந்த உலகம் ஒரு நல்ல பாடத்தை படித்து விட்டது. அந்தப் பாடத்தை கற்றுக் கொடுத்தவர் டொனால்ட் ரம்ப். ஆகவே தான் அந்த நல்ல மனுசனுக்கு' அவருடைய நீண்ட நாள் கனவான நோபல் பரிசைக் கொடுப்பதற்கு உலகத்தலைவர்கள் முன் வரவேண்டும் என்பது எனது ஆசை. அத்தோடு ட்ரம்ப் கற்றுத் தந்த இந்தப் படிப்பினையை புரிந்துகொண்டு அணு ஆயுதங்களின் வீரியத்தை விளங்கிக்கொண்டு இந்தப் பூமியைக் காப்பாற்றுவதற்கு அழகான அமைதியான வாழ்க்கையை எல்லா மனிதர்களும் வாழ்வற்கு ஆதிக்க சிந்தனையற்ற சமத்துவமான பாதையில் இந்த உலகை பயணிக்க வைப்பதற்கு உலகத் தலைவர்கள் முன்வரவேண்டும். இதற்குப் பிறகும் ஆதிக்க சிந்தனை மேலெழுந்தால் அண்ட வெளியில் வெறுமையாக சுற்றும் பல கோள்களைப் போல் பூமிப்பந்தும் வெறுமையாக சுழலும் என்பது நிறுதிட்டமான உண்மை.

**சாந்தையூரிவன், தி.ராம்மோகன்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்கிரையான நேபாளத்தின்




# உயரமான ஹோட்டல்

நேபாளம் நாட்டில் இளைஞர்கள் கலவரத்தால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். அரசியல்வாதிகள் தாக்கப்பட்டுள்ளனர். முன்னாள் பிரதமரின் மனைவி கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் பெரும் பொருட் சேதம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் நேபாளத்தின் மிக உயரமான ஹோட்டல்களில் ஒன்றான ஹில்டன் காத்மண்டு, எரித்து சாம்பலாக் கப்பட்ட வீடியோ இணையத்தில் வைரலாகியிருக்கிறது.

சுற்றுலாத்துறை பொருளாதாரத்தில் கணிசமான பங்கு வகிக்கும் நேபாளத்தின் விருந்தோம்பலை சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் நோக்கில் 2016ஆம் ஆண்டு இந்தக் கட்டடத்தை உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. இதில் 176 ரூம்கள் மற்றும் பல வசதிகள் உள்ளன. 64 மீற்றர் உயரத்துடன் நேபாளத்தின் மிகப்பெரிய ஹோட்டலாக இது இருந்தது.

வணிக ரீதியாக மட்டுமல்லாமல் கலாசார ரீதியாகவும் முக்கியத்துவம் பெறும் வகையில் உருவாக்கப்பட்டது ஹில்டன், காத்மண்டு. இதன் நீளமான முகப்பு கண்ணாடிகள் புத்த வழிபாட்டு கொடியின் வடிவத்தில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் ஒருபகுதி, காத்மண்டுவின் பரபரப்பான தெருக்களில் நெருக்கமாகவும், மறுபகுதி லாங்டாங் மலையை நோக்கி விரிவடைந்தும் உள்ளது. நேபாளத்தில் அடிக்கடி நில அதிர்வு ஏற்படும் என்பதைக் கருத்தில்கொண்டு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையில் முன்னேற்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது இந்த ஹோட்டல்.

ஹில்டனின் பளபளக்கும் கண்ணாடிகள் நெருப்பின் வெப்பத்தில் உருகியுள்ளன. சுவர்கள் முழுவதும் கருகி, உட்பக்கத்தில் அழகிய வேலைப்பாடுகளும், மதிப்புமிக்க பொருட்களும் பஸ்பமாகியிருக்கிறது. ஆடம்பரமான அனுபவத்தை வழங்கிவந்த இடம், கெட்ட கனவுபோல கடந்த கலவரத்தின் எச்சமாக கருகி நிற்கிறது.

நேபாளத்தின் மிக உயரமான ஹோட்டல் உடைந்து நொருங்கிவிடுவது போல சாம்பல் உருவமாக உள்ளது. பல வருட முதலீடு, வடிவமைப்பு, உழைப்பு மற்றும் கலாசார நோக்கம் எல்லாமும் சிலமணிநேர கோபத்தில் சாம்பலாகியிருக்கிறது.

# ஆச்சி அறிவுரை



## ரீயூசனுக்குள்ளே பிள்ளைகள் வீதியிலே-பெற்றோர்கள்

**பேராண்டி...**

குதிரையை குளத்தில கொண்டுபோய் விடலாம். ஆனால் குதிரை தான் தண்ணி குடிக்கவேணும். எண்டொரு பழமொழி இருக்குது.

அதுக்கான அர்த்தத்தை முதலில எங்கட பெற்றோர்தான் விளங்கிக்கொள்ளவேணும்.

பிள்ளைகளைப் படிக்கச் சொல்லி அறிவுரை சொல்லலாம். ஆனால் நீ இதைத்தான் படிக்கவேணும். அதுதான் எங்களுக்குக் கௌரவம் எண்டு தங்கட வாழ்க்கையையும் பிள்ளையின் வாழ்க்கையையும் நாசமாக்கிற பெற்றாரை என்னெண்டு திருத்த?

குழந்தைப் பருவப் படிப்பு எண்டுறது பிள்ளைகளுக்கு எவ்வளவு முக்கியமானது தெரியுமோ. அதுதான் பிள்ளையின்ர வாழ்வைத் தீர்மானிக்கின்ற கல்வி.

அதைக் கல்வி எண்டு சொல்லுறதைவிட, பிள்ளை தனக்குப் பிடிச்ச சூழலில புதிய விடயங்களை விளையாட்டினூடாகவும் ஆடல், பாடல் ஊடாகவும் கற்றுக்கொள்ளுற களம் எண்டு சொல்லுறதுதான் சரியானது.

இதைப் புரிஞ்சு கொள்ளாத தாய், தகப்பன் பிள்ளைகளைப் பிறந்த உடனையே; பிள்ளை டொக்டரா வரவேணும். இஞ்சினியரா வரவேணும் எண்டு முடிவெடுக்கிறது எவ்வளவு கொடுமையானது.

முதலில பிள்ளை எதை விரும்புது எண்டு தெரிஞ்சு கொள்ள முயற்சிக்க வேணும். அதுகளைச் செய்யாமல் பக்கத்து வீட்டுக்காரப் பிள்ளை டொக்டருக்குப் படிக்குது, சொந்தக்காரப் பிள்ளை இஞ்சினியர் ஆகிட்டுது எண்டுறதுக்காக எங்கட பிள்ளையின்ர வாழ்க்கையை அந்த வட்டத்துக்குள்ள திணிக்கிறது நியாயமில்லாத ஒண்டு.

ஆனால் இதைப் பிள்ளையின்ர நன்மைக்காகத்தான் செய்யிறம் எண்டு பெற்றோர் சொல்லுறதுதான் கொடுமையிலும் கொடுமை. எப்படியாவது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில பிள்ளைய பாஸ் பண்ண வைச்சிடவேணுமெண்டு படாப்பாடு படுகினம்.

காலமையில இருந்து இரவு பத்துப் பதினொரு மணிவரைக்கும் பிள்ளையைப் படி... படி... எண்டால் அது பிள்ளையோ? மிசினோ?

இப்ப பிள்ளைளையை ரீயூசனுக்கு அனுப்பிவிட்டு ரியூசன் வாசலிலை கால் கடுக்கக் காத்திருக்கிற சிலபேர், போனை நோண்டிப் பொழுது போக்கிற சிலபேர், அரட்டை அடிக்கிற சிலபேரெண்டு றோட்டில பெற்றோரைப் பார்க்க சிவசிவா... இதுக்கு முடிவே இல்லையா எண்டு தோணுது.


இதுகளைவிட பிள்ளை பள்ளிக்கூடத்துக்குப் போகேக்க கொண்டு போற புத்தகப் பையைப் பார்த்தால் பத்து நாள் பள்ளிக்கூடத்திலை தங்கி நிண்டு படிச்சிட்டு வரும் எண்ட மாதிரியெல்லோ இருக்கு.

ஓம், பேராண்டி, பிள்ளைகளுக்கு நேரசூசிப்படி புத்தகம் கொப்பியைக் கொண்டுவர, சொல்லிக் குடுக்கவேணும்.

இது என்னெண்டா பிள்ளைக்கு குடுத்த புத்தகம், வாங்கின கொப்பி அவ்வளவையும் பையில வைச்சு முதுகில கொழுவிக்கொண்டு பிள்ளை போறதைப் பார்க்க எங்களுக்கே மூச்சு வாங்குது. இது பிள்ளையின்ர முதுகெலும்பயெல்லோ வளைச்சுப்போடும். இதுகளைப் புரிஞ்சுகொள்ளாம நடக்கிற பெற்றோரையும் ஆசிரியர்களையும் நினைக்க மனசு வலிக்குது பேராண்டி.

மாவை.நா.கஜேந்திரன்

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்த் தேய்த்து குளிப்பது எப்படி?



எண்ணெய்க் குளியல் என்பது பலகாலமாக நம்மிடையே தொடரும் மிகச் சிறந்த பாரம்பரியம். அது முடி வளர்ச்சிக்கு உதவுவதோடு, உடலைக் குளிர்ச்சியாக்கி, தசைகளை வலுவாக்கி, சரும ஆரோக்கியத்துக்கும் உதவக் கூடியது.

ஆனால், இந்தக் காலத்தில் தலைக்கு எண்ணெய் வைப்பதையோ, எண்ணெய்க் குளியல் எடுப்பதையோ பலரும் விரும்புவதில்லை. எண்ணெய்க் குளியலை வாழ்வியல் முறையாக்கிக் கொள்வது மிகவும் சிறப்பானது.

வாரம் ஒருமுறையாவது தலைக்கு எண்ணெய் வைத்துக் குளிப்பது கூந்தலை மட்டுமன்றி, ஒட்டுமொத்த உடலையும் ஆரோக்கியமாக வைக்கும். ரிலாக்ஸ் செய்யும். எண்ணெய்க் குளியல் எடுப்பதால் முடி உதிர்வு குறையும் என்பது உண்மை தான்.

புரதச்சத்து அதிகமுள்ள பருப்புகள், தானியங்கள், முளை கட்டிய பயறு வகைகள், விதைகள் போன்றவற்றைச் சாப்பிட ஊக்கப்படுத்துங்கள். தூக்கமின்மையும் முடி உதிர்வுக்கு காரணம் என்பதால் சரியான நேரத்துக்கு சரியான அளவு தூக்கமும் அவசியம்.

எண்ணெய்க் குளியலுக்கு சுத்தமான, கலப்படமில்லாத தேங்காய் எண்ணெயே போதுமானது. பொடுகுத் தொல்லை இருப்பவர்கள் வேப்பிலை சேர்த்துக் கொதிக்க வைத்த தேங்காய் எண்ணெய் உபயோகிக்கலாம்.

கரிசலாங்கண்ணிக் கீரை, துளசி, பொடுதலை, செம்பருத்தி இலை, மருதாணி எல்லாம் தலா ஒரு கப் எடுத்துக்கொள்ளவும். மற்ற இலைகளை முதலில் அரைத்துவிட்டு, கடைசியாக செம்பருத்தி இலை சேர்த்து அரைத்துச் சாறு எடுக்கவும்.

ஒரு கப் சாற்றுக்கு 3 கப் அளவுக்கு தேங்காய் எண்ணெய் எடுத்துக்கொள்ளவும். எண்ணெயை சூடுபடுத்தி, அதில் சாறு சேர்த்துக் கொதிக்க ஆரம்பிக்கும் போது உலர்ந்த ரோஜா இதழ்கள் 2, சிறிது எலுமிச்சைத் தோல் விழுது சேர்த்து, எண்ணெய் பிரிந்து வரும் வரை நன்கு கொதிக்க விடவும். இரண்டு, மூன்று நாட்களுக்கு அப்படியே வைத்திருந்து, வடிகட்டி உபயோகிக்கவும். கூந்தல் உதிர்வுக்கு இதுவும் நல்ல தீர்வளிக்கும்.

# அடுக்களைப் பக்கம்



✦ சூடான எண்ணெயில் சிறிதளவு மைதா மா சேர்த்த பிறகு, எதைப் பொரித்தாலும் வாணலியில் ஒட்டாது.

✦ துவரம்பருப்பை வேக வைக்கும்போது சிறிய தேங்காய்த்துண்டை நறுக்கிப் போட்டால் பருப்பு விரைவில் வெந்து, பக்குவமாக இருக்கும்.

✦ தோசைக்கு மாவு அரைக்கும்போது கொஞ்சம் வெண்டைக்காயையும் சேர்த்து அரைத்தால் தோசை பஞ்சு மாதிரி இருக்கும்.

✦ தக்காளி சட்னி செய்யும்போது அதில் சிறிது எள்ளை வறுத்துப் பொடி செய்து போட்டு, அதில் சிறிது எலுமிச்சைப்பழச்சாறு கலந்தால் ருசி அதிகமாக இருக்கும்.

✦ கருணைக்கிழங்கை வேகவைக்கும்போது சிறிதளவு வெல்லம் சேர்த்து வேக வைத்தால், வெகு சீக்கிரம் பஞ்சுபோல் வெந்துவிடும்.

✦ கீரை நிறம் மாறாமல் இருக்க சிறிது உப்பு சேர்த்து வேக வைக்க வேண்டும்.

✦ உளுந்து வடை செய்யும்போது, ஒரு கை சாதம் சேர்த்து அரைத்து வடை தட்டினால் உள்ளே மெத்தென்றும், வெளியே மொறு மொறுப்பாகவும் இருக்கும். உருளைக்கிழங்கை வேக வைத்து தோலுரித்து மாவுடன் சேர்த்து அரைத்துத் தட்டினாலும் மொறு மொறுப்பாக இருக்கும்.

✦ சப்பாத்தியின் மேல் சூடான பால் விட்டு, சர்க்கரை, ஏலக்காய்த்தூள் போட்டு, சிறிது நேரம் ஊற வைத்துக் கொடுத்தால் வயதானவர்களும் குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.




# நாட்டுக் கோழி பிரியாணி



## சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை:




- நாட்டுக்கோழி – அரை கிலோ
- சீரகச் சம்பா அரிசி – அரை கிலோ
- சின்ன வெங்காயம் – 15
- எண்ணெய் – 3 கரண்டி
- பச்சை மிளகாய் – 2
- மிளகாய்த்தூள் – 2 1/2 கரண்டி
- மல்லித்தூள் – 4 கரண்டி
- மஞ்சள்தூள் – ஒரு கரண்டி
- பெருஞ்சீரகம் – ஒரு கரண்டி
- இஞ்சி, பூண்டு விழுது – ஒரு கரண்டி
- பட்டை – 2 துண்டு
- கிராம்பு – 4
- ஏலக்காய் – 5
- அன்னாசிப் பூ – 4
- பிரியாணி இலை – 4
- நெய் – 3 கரண்டி
- உப்பு – தேவைக்கேற்ப
- தக்காளி – 2

### செய்முறை


வெங்காயத்தைத் தோல் நீக்கி, சிறுதுண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும். தக்காளி, கொத்தமல்லித்தழை, புதினாவைச் சிறுதுண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும். கொத்தமல்லித்தழை, புதினா, பெருஞ்சீரகம் சேர்த்து விழுதாக அரைத்து எடுத்துக்கொள்ளவும். அடுப்பில் பிரஷர் குக்கர் வைத்து நெய், எண்ணெய் சேர்த்து காயவிடவும். காய்ந்த பின் பட்டை, கிராம்பு, ஏலக்காய், அன்னாசிப் பூ, பிரியாணி இலை சேர்க்கவும். பிறகு இதனுடன் வெங்காயம், கீறிய பச்சை மிளகாய், இஞ்சி - பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். அத்துடன் தக்காளி சேர்த்து வதக்கவும், பின்னர் அரைத்த விழுது சேர்த்து நன்றாக வதக்கவும். பிறகு நாட்டுக்கோழி துண்டுகள் சேர்த்து அத்துடன் மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், மல்லித்தூள், உப்பு சேர்த்து நன்றாக வதக்கவும். சிறிதளவு தண்ணீர் சேர்த்து குக்கரை மூடி மூன்று விசில் விடவும். திறந்து, அரிசி சேர்த்து, சரியான அளவு தண்ணீர் (ஒரு கப் அரிசி = ஒன்றரை கப் தண்ணீர்) ஊற்றி மூடி இரண்டு விசில் வரும் வரை வேக வைக்கவும். சிறிது நேரத்திற்குப் பின் மூடியைத் திறந்து மெதுவாகக் கிளறி விடவும். **நாட்டுக்கோழி பிரியாணி ரெடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐஸ் போதை நிலையம் நடத்தியவர்கள் நாட்டை அழிக்கும் நோக்கத்தில் தானே நடத்தியிருப்பார்கள்.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்



சர்வதேச பொறிமுறைக்கு அனுமதியோம் என்கிறதே அரசாங்கம். இதை ஐ.நா ஏற்குமா?

**என்னைப் பிடிக்காதவர்களுக்கு நான் என்ன சொல்ல வேண்டும் வியாசரே?**

வேந்தன் - சுன்னாகம்

என்னடா சொன்னான் அவன்? என்னைப் பிடிச்சவனையெல்லாம் கொல்லப் போறானா?

என்னைப் பிடிச்சவன் கோடிப் பேர் இருக்கிறாங்கடா வெளியில...

இது மாஸ்ரர் படத்தில் விஜய் சொன்ன வசனம்.

இப்படியெல்லாம் நீங்கள் சொல்லத் தேவையில்லை. உங்களைப் பிடிக்காதவர்களிடம் போய் நீங்கள் ஏன் உங்களை நிரூபிக்க வேண்டும்.

முட்டாள்கள் மற்றவர்களிடம் முட்டி மோதிக் கொண்டே தான் இருப்பார்கள். இவர்களிடம் தலையைக் கொடுத்தால் எங்களுக்குத் தான் வலிக்கும்.

ஆதலால் இவர்களை கண்டும் காணாமல் செல்வதே சிறந்த உபாயம்.

**வியாசரே யாருக்காவது அடிக்க வேண்டும் போலயிருக்கிறதே என்ன செய்ய?**

ரிதுஷ்- வதிரி

ஓ... அப்படியா முதலில் ரஷ்யாவுக்கு ரிக்கட் எடுங்கள். அவர்கள்தான் உக்ரைனை துவம்சம் செய்கிறார்கள். அவர்களை அடித்துவிட்டு அப்படியே இஸ்ரேலுக்கு வாருங்கள். அவர்கள் தான் காசா மக்களை கொன்று குவிக்கிறார்கள்.

அவர்களையும் ஒரு புடி புடித்து விட்டு நேராக வட கொரியாவுக்கு செல்லுங்கள். அங்குதான் மிகக் கொடும் மனித உரிமை மீறல்கள் நடக்கிறது.

அவர்களையும் கவனித்துவிட்டு வாருங்களேன்.

இவை அனைத்துக்கும் முன்னர் ஈழத் தமிழினத்துக்கு கொடுமை செய்த பலரின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. வாருங்களேன் அதையும் தந்து விடுகிறேன்.

நன்றி வணக்கம்.

**இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வித்தியாசம் என்ன வியாசரே**

ரதீஸ் - மந்துவில்

நாம் படும் துன்பம் மற்றவர்களுக்கு இன்பமாகவும் அதுபோல நாம் படும் இன்பம் மற்றவர்களுக்குத் துன்பமாகவும் இருக்கும்.

**மற்றவர்களை குற்றவாளி எனக்கூற நீயார்?**

விஜயகுமார் - முகமாலை

விபச்சாரம் செய்தாள் என ஒரு பெண்ணை அந்த ஊரே கல்லல் அடித்து துரத்துகிறது.

அவர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள அந்த பெண் இயேசு பிரானிடம் அடைக்கலம் புகுந்து கொண்டாள்.உங்களில் யார் தவறு செய்யாதவர்களோ அவர்கள் இவளின் மீது முதலில் கல்லெறியுங்கள் என இயேசு பிரான் கூற ஊரார்கள் வெட்கித் தலை குனிந்து சென்றனர்.இவ்விடயம் பரமபிதா காலத்திலிருந்து இன்றுவரை மாறுவதாய் இல்லை.




**ஐஸ் போதை நிலையம் நடத்தியவர்கள் நாட்டை அழிக்கும் நோக்கத்தில் தானே நடத்தியிருப்பார்கள்.**

சிவஞானம் - வடமராட்சி

இந்த நாட்டை எப்படியெல்லாம் சூரையாட முடியுமோ அப்படியெல்லாம் செய்து தமக்குச் சொத்துச் சேர்த்து விட்டார்கள்.

அவர்கள் பார்வையில் அது சொத்தல்ல முழுவதும் தமது எதிர்கால பரம்பரைக்கு சேர்க்கும் பாவம்.

இந்த விடயத்தில் யார்? எவர் என்ற பாகுபாடின்றி குற்றமிழைத்தவர் அனைவருக்கும் தூக்கு தண்டனை நிறைவேற்ற வேண்டும்.

**பெண்களில் வியாசருக்கு அதிக பிரியம் போல?**

ரவி - ராஜா- யாழ்ப்பாணம்

பெண்களில் எனக்குப் பிரியம். ஏனென்றால் என் அம்மா பெண் என்பதால். பெண்களில் எனக்குப் பிரியம் என் அக்கா தங்கை பெண் என்பதால்.

பெண்களில் எனக்குப் பிரியம். என் மனைவி பெண் என்பதால்.

பெண்களில் எனக்குப் பிரியம். என் நண்பிகள் பெண்கள் என்பதால்.பெண்களில் எனக்குப் பிரியம் மட்டுமல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கிறது.

ஏனென்றால் பெண் இன்றி இந்த உலகம் மட்டுமல்ல எதுவுமே இல்லை ஆதலால்...

**உனக்கு முன்னால் இருப்பவர்களைப் பாராதே. பின்னால் இருப்பவர்களைப் பார் என்பது?**

கௌரிசன் - அராலி

ஒவ்வொரு நாளும் புட்டும் சம்பலும் என்றால் எப்படி சாப்பிட முடியும் எனத் தாயைச் சினத்தபடி பள்ளிக்கூடம் சென்ற மாணவன் காலைப் பிரார்த்தனை நேரம் மயங்கி விழுந்த மாணவனுக்கு முதலுதவி செய்து தான். அவன் கண் விழித்ததும் கூறினான்.

இன்று காலை வீட்டில் சாப்பிட எதுவும் இல்லை. ஆதலால் வெறும் தேநீர் மட்டுமே குடித்தேன் என்று.

எமக்கு மேலே இருப்பவர்களை விட கீழே இருப்பவர்களைப் பார்த்தால் வாழ்வின் கொடூரம் புரிந்து விடும்.

**சர்வதேச பொறிமுறைக்கு அனுமதியோம் என்கிறதே அரசாங்கம். இதை ஐ.நா ஏற்குமா?**

மோகன் - பிளவத்தை

கடந்த கால அரசுகள் மேற்கொண்ட உள்ளக விசாரணை என்ற போலிகளை பார்த்து வெறுத்துப் போன தமிழ் மக்களுக்கு உள்ளக விசாரணை என்பதில் துளி கூட நம்பிக்கை இல்லை.

உள்ளக விசாரணையின் ஊடாக ஒரு நாளும் இல்லாது போய்விட்டது. எமக்கான நீதி கிடையாது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளனர்.அநுர அரசும் அதே சர்வதேச எதிர்ப்பு புராணத்தையே பாடுகிறது.

ஆனாலும் சர்வதேச தலையீடு இல்லாமல் இலங்கை ஆட்சியாளர்களால் நீதியான தீர்வைத் தர முடியாது என்பதே நூறு வித உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

69

## செங்கை ஆழியான்

இயந்திரத் துப்பாக்கியை இயக்கியபடி கொத்தளத்தில் ஏறிய டயஸ், சீலன் ஆகியோர் அருகில் ஷெல்லொன்று வெடித்தது. சீலன் இரு கால்களையும் இழந்து விழ, டயஸ் சற்று முன்னேறி மடிய நேரிட்டது. கொத்தளப் பகுதியில் ஏறிய போராளிகளுக்கு உதவச்சென்ற சுண்ணாடி, ஜொனி, புரட்சிமாறன், நெல்சன் அனீபா, ஜேம்ஸ், வசிட்டன், சந்துரு, பிலிப்ஸ். நிசாந்தன் ஆகியோர் குண்டடிபட்டு மதிலடிவாரத்தில் வீழ்ந்தனர். கொத் தளத்தின் மேற்பகுதியில் நிலையெடுத்திருந்த லோகனும், அனிபாவும் மரணமடைய நேரிட்டது.

கடற்கரை வீதிப்பக்கமாகக் கோட்டை மதில் மீது ஏறி நிலை யெடுக்க நிகழ்ந்த போராளிகளின் முயற்சி தோல்வியில் முடிந்தாலும், இராணுவத்தினருக்கு கோட்டையின் பலம், பாதுகாப்புக் குறித்து மறு சிந்தனைக்கு இடமளித்தது.

அன்றிரவு கோட்டையின் பிரதான வாயிலைக் கைப்பற்றும் பொறுப்பைப் பெண் போராளிகள் ஏற்றிருந்தனர். பொலிஸ் நிலையக் கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த காவலரணிலிருந்து இத் தாக்குதல் தொடர்ந்தது. கோட்டை வாசலுக்கும் இந்தக் காவலரணுக்கும் இடையில் 40 யார் தூரமேயிருந்தது. போராளிகள் கோட்டைவாயிலைக் கைப்பற்ற முயற்சிப்பார்கள் என்பதை இராணுவத்தினர் தெரிந்திருந்தமையால், கோட்டை வாயில் பலப்படுத்தப்பட்டிருந்தது. விமானங்களும் கோட்டைவாசலையடுத்த பகுதியைத் தமது பிரதான இலக்காகக் கொண்டிருந்தன.

கோட்டை வாயிலை நோக்கிய பாதையானது ஒடுங்கியது. பாதையின் இருபக்க கரைகளினூடாக பெண் போராளி சங்கீதாவின் தலைமையில் பெண்கள் படையணி துணிவுடன் முன்னேறியது. பெண்கள் படையணிக்கு உதவியாக மறுபக்கத்தில் ஆண்போராளிகள் கோட்டைவாயிலின் அருகிலும், மேலேயும் இருந்த இராணுவ அரண்களைத் தாக்கி அவர்களை திசை திருப்பிக் கொண்டிருந்தார்கள். எனினும், கோட்டை வாயிலைக் கைப்பற்ற முயன்ற லெப், சங்கீதா, மாதங்கி, அநுரா, மாதுரி ஆகியோர் கோட்டை வாயிலிலேயே மரணமடைந்தார்கள்.

கோட்டை வாயிலுக்கு அருகேயிருந்த கொத்தளத்தைக் கைப்பற்றும் முயற்சியிலிருந்த போராளிகள், டாங்கிபோன்று அமைக்கப்பட்ட புல்டோசர் ஒன்றில் தென் பகுதிக் கொத்தளத்தை நோக்கி நகர்ந்தனர். விமானத்திலிருந்து வீசப்பட்ட வெளிச்சக் குண்டுகளிலிருந்து இந்தப் புல்டோசரின் நகர்வை இராணுவம் கண்டு கொண்டது.

(தொடரும்...)

# இனிப்பும் கசப்பும்




# கடற்புறா

சிறிதும் அஞ்சாதே! பலவர்மன் கரம் நீளமானது. எங்கும் எட்டக் கூடியது. உன்மேல் அத்துமீறிக் கையை வைத்தால் இளைய பல்லவன் அதே விநாடி பிணமாகிவிடுவான். பயப்படாதே! சொன்னபடி செய். இன்னும் ஐந்தே நாட்களில் இந்த அக்ஷயமுனை பழைய நிலையை அடையும். நீயும் பழையபடி இதன் மகாராணி போல் சஞ்சரிப்பாய்" என்று சொன்னான் பலவர்மன்.

அவன் சொற்களைக் கேட்ட மஞ்சளழகியின் முகத்தில் புதிய ஒளி ஒன்று பிறந்தது. "சரி தந்தையே" என்று கூறிவிட்டுத் தலையைக் கோதிக்கொண்டு ஆடையைச் சீர்ப்படுத்திக் கொண்டு தன் அறையை நாடினாள் மஞ்சளழகி.

அறைக் கதவைத் திறந்து மிக வேகமாக அதை மூடித் தாழிட்டாள். அவள் தாழிட்டுத் திரும்பியதும் அந்த அறையின் மூலையிலிருந்த திரைச்சீலையை விலக்கிக் கொண்டு இளையபல்லவன் வெளிவந்தான். அடுத்த கணம் அவன் அணைப்பிலிருந்தாள் மஞ்சளழகி. சலனப்படாத அறை விளக்கு பிணைந்து நின்ற அந்த இருவர் மீதும் தனது பொன்னொளியை வீசியது. அந்தப் பொன்னொளியில் மஞ்சளழகியின் பொன்னிறக் கன்னங்கள் பத்தரை மாற்றுத் தங்கத்தையும் பழிக்கும்படியாகப் பிரகாசித்தன. அந்தக் கன்னங்களைத் தடவிக் கொடுத்த இளையபல்லவன் அவள் தலை மயிரையும் கோதிவிட்டான். அவள் தனது தலையை நிமிர்த்தி. கண்களை உயர்த்தி இளையபல்லவனை நோக்கினாள்.

அந்தக் கண்களில் காதலும் இருந்தது. அச்சமும் இருந்தது. காதலைவிட அச்சமும் வியப்பும் அதிகமாயிருந்தன என்று சொன்னாலும் மிகையாகாது. அத்தகைய உணர்ச்சிகளுடன் சொன்னாள் அவள். "நீங்கள் சொன்னது சரி தான்." என்று.

"என்ன சொன்னார் தந்தை!" என்று புன்முறுவலுடன் வினவினான் இளையபல்லவன்.

"உங்களை மயக்கச் சொன்னார்?" என்று அவளும் இன்பப் புன்முறுவலை இதழ்களில் தவழவிட்டாள்.

"பைத்தியக்காரர்" என்றான் இளையபல்லவன். "ஏனப்படிச் சொல்கிறீர்கள்?"

"என்னை மயக்கும்படி சொன்னாரே போயும் போயும்." "சொன்னாலென்ன?"

"ஏற்கெனவே மயங்கிக் கிடப்பவனை மயக்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது" "உம்! மயங்கிக் கிடக்கிறீர்களாக்கும் நீங்கள்?" "இந்தப் பொய் என்னிடம் வேண்டாம்." "பொய்யென்று உனக்கெப்படித் தெரியும்?" "உங்கள் கடல் புறாவைப் பார்த்தேன்."

அதில் எழுதியிருக்கிறதா உன்னிடம் நான் மயங்கவில்லையென்று? "திட்டமாக எழுதவில்லை." "மறைமுகமாக எழுதியிருக்கிறதாக்கும்?"

"என்ன எழுதியிருக்கிறது?" "அதன் பக்கப் பலகையில் கடல் புறா என்ற பெயர் தெரியப் பெரும் கிளிஞ்சல்களும் சங்குகளும் சிப்பிகளும் புதைக்கப்பட்டிருக்கின்றன." "அதனாலென்ன!"

"கடல் புறாவா அது? காஞ்சனைப் புறாவா?" இதைக் கேட்ட மஞ்சளழகி பெருமூச்செறிந்தாள். பொறாமைப் புயல் மெல்ல அவள் இதயத்தில் வீசுவதை அவன் உணர்ந்தான். உணர்ந்ததால் அவளை வலியத் தழுவினான். "மஞ்சளழகி! உன்னை ஏமாற்ற நான் விரும்பவில்லை. என் மனம் பாலூர்ப் பெருந்துறையிலிருக்கையில் காஞ்சனா தேவியிடம் லயித்தது உண்மை. இங்கு வந்தபின் உன்னிடமும் சிக்கிக்கொண்டது. மனம் ஒன்று தான். எனக்கு அது சிக்கி இருக்கும் சிறைகள் இரண்டு. அது எப்பக்கம் இழுபடுமோ தெரியாது.

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே!



## தியாகிப் பட்டம் சுமந்தது போதும்

## உங்களையும் கொஞ்சம் கவனியுங்கள்!



பெண்கள் நன்கு படிக்கிறார்கள். சம்பாதிக்கிறார்கள். போட்டிபோட்டு முன்னேறுகிறார்கள். எல்லாம் சரிதான். ஆனால், தன்னைக் கவனித்தல் என்கிற சுய அக்கறையில் போதிய கவனம் செலுத்துகிறார்களா? என்றால் இல்லை என்பதே நிதர்சன உண்மை. சுய அக்கறையில் கோட்டைவிட்டு, தியாகிப் பட்டம் சுமக்கும் பெண்களே இங்கு பெரும்பான்மை. உணவு, உடல் மற்றும் மனநலம், அழகு உள்ளிட்ட விடயங்களில் எப்படியெல்லாம் அக்கறை எடுத்துக் கொள்ளலாம் என்பது பற்றிக் கவனிப்போம்.

**சீனி எண்ணெய்க்கு விடை கொடுப்போம்**

"முதலில் கவனம் செலுத்த வேண்டிய விடயம் நேரத்துக்குச் சாப்பிட வேண்டுமென்பது தான். அலுவலக வேலைகள், வீட்டுக் கடமைகளில் மூழ்கிவிட்டால் சாப்பிட வேண்டும் என்பதையே பல பெண்கள் மறந்து விடுகிறார்கள். "நேரத்துக்குச் சாப்பிடாவிட்டால் நொறுக்குத்தீனிகள், துரித உணவுகளின் மீது ஆர்வம் ஏற்படும். அதே போல் மற்றவர்கள் மிச்சம் வைத்ததை உண்பது, கெட்டுப்போன உணவுகளைத் தூக்கிப்போட மனமில்லாமல் சாப்பிடுவது போன்ற தவறுகளையும் சிலர் செய்கிறார்கள். இது ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் சீர்குலைக்கும்.

நேரத்துக்குச் சாப்பிட்டாலும் பெரும்பாலானோரின் உணவில் புரதச் சத்து இருப்பதில்லை. காய்கறிகளோ, பருப்போ இருப்பதில்லை. இதனாலும் எடைகூடி உடல்நலன் சார்ந்து பிரச்சினைகள் வருகின்றன. முக்கியமாக, சர்க்கரை உட்கொள்ளும் அளவைக் குறைக்க வேண்டும். ஒரு நாளைக்கு 3 கரண்டி எண்ணெய் தான் ஒருவருக்குத் தேவை. எனவே, சமையல் எண்ணெயின் அளவைக் குறைக்க வேண்டும். வெளி உணவுகளையும் முடிந்தவரை தவிர்க்க வேண்டும். எடையைக் குறைக்கிறேன் என்று பட்டினி கிடப்பதும் ஆபத்தானது. பருமனாக இருப்பதாக உணர்ந்தால் முறைப்படி மருத்துவரின் ஆலோசனைப்படி புதிய உணவுத் திட்டத்தைப் பின்பற்றுங்கள்"

குடும்பத்துக்கு துரோகம் செய்யாதீர்கள்!

"சுய அக்கறையும், கவனிப்பும் பெண்களுக்கு மிக மிக முக்கியம். பலர் இதை சுயநலம் என்று தவறாகப் புரிந்துகொள்வார்கள். உங்களை நீங்களே கவனித்துக் கொள்ளாமல் இருப்பதுதான் குடும்பத்திற்குச் செய்கின்ற பெரிய துரோகமாக இருக்கும். நீங்கள் நன்றாக இருந்தால் தான் குடும்பம் நன்றாக இருக்கும் என்ற கோணத்தில் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்"

"ஆண்களைப் போல அல்லாமல் பெண்களின் உடலானது பருவங்களுக்கேற்ப மாற்றமடைந்து கொண்டே இருக்கும். பூப்படையும் போது, குழந்தைப் பிறப்பின் போது, மாதவிலக்கு நிற்கும் போது என்று பெண்களின் உடல்நிலை இயல்பாகவே மாற்றங்கள் நிறைந்ததாக உள்ளது. எனவே, இதை உணர்ந்து நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உடற்பயிற்சிகள் அவசியம் தேவை.

**உங்கள் ஆரோக்கியம் உங்கள் கையில்**

"வீடு, அலுவலகம் என இரண்டுக்குமிடையே ஒரு சமநிலையைப் பராமரிக்க முயற்சி செய்யும்போது மன அழுத்த ஹார்மோன்களில் பெரிய ஏற்றத்தாழ்வு உண்டாகும். எரிச்சல், பொறுமையின்மை, அடிக்கடி மனநிலையில் மாற்றம் ஏற்படும். எல்லாவற்றையும் தானே செய்ய வேண்டும் என்று நினைப்பதாலும் சுறுசுறுப்பு குறையும், உறவுகள் பாதிக்கப்படும்.

அதிக மன அழுத்தம் ஏற்படும் போது அதிகம் சாப்பிட வேண்டும் என்கிற வேகமும் மனதில் ஏற்படும். அந்த நேரத்தில் உணவு என்பது ஆறுதல் போல தெரியும். ஆனால், பின்பு அதுவே குற்ற உணர்வையும் ஏற்படுத்தும். உடல் பருமனைப் போல மற்ற உடல் உபாதைகளையும் வரவழைக்கும்.

மனரீதியான உணர்வுகளை அலட்சியம் செய்யக்கூடாது. தொடர்ச்சியாக மன அழுத்தத்தைச் சந்திப்பது போல தோன்றினால் தயங்காமல் நம்பகமானவர்களிடம் பேச வேண்டும். உளவியல் ஆலோசகரை நாட வேண்டும். தனியே இருப்பதும், எல்லாவற்றையும் தனியே எதிர்கொள்வதும் மனரீதியான பலவீனத்தை ஏற்படுத்தும்.


**அழகுக்காகச் செலவிடுவது, ஆடம்பர செலவல்ல!**

"உடைகளும், நம்முடைய தோற்றமும் நமக்கே நம் மீது நம்பிக்கையைத் தரும். எனவே, கூந்தல் பராமரிப்பு, சருமப் பராமரிப்புக்காக நேரமெடுத்துக் கொள்வது நேரவிரயம் என்று நினைக்கக்கூடாது.

"சன் ஸ்கிரீன், மாய்ஸ்ச்சரைஸர் போன்றவற்றுக்காகச் செலவிடுவதை ஆடம்பரச் செலவாக நினைக்க வேண்டாம். சருமத்தில் ஏதேனும் அசாதாரணம் தோன்றினால் உடனே ஆலோசனை பெறவேண்டும்.

பருக்களை ஆரம்பத்திலேயே அகற்றிவிட வேண்டும். தூக்கத்தைத் தவறவிட்டால் சரும நலன் பாதிக்கப்படும், சுருக்கம் ஏற்படும், முதிர்ந்த தோற்றம் உருவாகும். கண்களைச் சுற்றி கருவளையம் வரும். எனவே, சரியான நேரத்திற்குத் தூங்குவது முக்கியம்.

கூந்தல் நலனைப் பொறுத்தவரை சீயக்காய் நல்லது. இல்லாவிட்டால் ஷாம்பூ உபயோகித்துக் குளிக்கலாம். திக்கான ஷாம்பூவை அப்படியே தலையில் வைக்காமல் தண்ணீர் கலந்து பயன்படுத்த வேண்டும். தலையை நன்றாக அலச வேண்டியது முக்கியம். ஷாம்பூவை போல கண்டிஷ்னரும் உபயோகிக்க வேண்டும்.



# தெளிவே என் சிந்தனையுள்... 27

ஒரு சோம்பேறியும் கடும் உழைப்பாளியும் சந்தித்துக் கொள்கிறார்கள். சோம்பேறி கேட்கிறான். "ஏன் நீ இவ்வாறு கடுமையாக உழைக்கிறாய்" உழைப்பாளி பதில் சொல்கிறார். பணம் சேர்ப்பதற்காக "பணத்தை சேர்த்து என்ன செய்வாய்?"

எனது முதுமைக்காலத்தில் கஸ்ரப்படாமல் சந்தோசமாக காலாட்டிக் கொண்டிருப்பேன்.

"நான் இப்போதே சந்தோசமாகக் காலாட்டிக் கொண்டுதானே இருக்கிறேன். பிறகு ஏன் கஸ்ரப்பட வேண்டும்" என்றான் சோம்பேறி.

இது நகைச்சுவையாயினும் இதில் உட்பொருள் இருக்கிறது. இன்றுவரை பலர் தமது எதிர்காலத் தேவைக்காக நிகழ்காலத்தை அனுபவிக்காமல் விட்டுவிடுகிறார்கள் என்பதுதான் உண்மையானது.

உதாரணத்திற்கு ஒருவருக்குப் பாடும் திறன் இருக்கிறது. அது அவருக்கு கடவுள் கொடுத்த வரம்.

அவர் நிறைய கச்சேரிகளை நடத்துகிறார். அல்பங்களை வெளியிடுகிறார். அதனால் அவர் நிறைய சம்பாதித்து தனது உறவுகளுக்கு வீடு, கார், பங்களா என வாங்கிக் கொடுக்கிறார்.

இதனால் அவருக்கு சந்தோசம் ஏற்படும் என நீங்கள் நினைக்கிறீர்களானால் அது தவறு.

ஆம், அவருக்கு கடவுள் கொடுத்த கொடை, பாடுவது. அவர் தான்பாடும் பாடல்களை நன்றாகப் பாடினேன் என்ற மனத்திருப்தியே அவருக்கு மகிழ்வைத் தரவல்லது.

**அன்பானவர்களே!**

எம்மில் பலர் நாளைய எதிர்கால மகிழ்வுக்கென இன்றைய நிகழ்காலத்தை நரகமாய் கடந்து கொண்டிருக்கிறார்கள்.

இது நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மகிழ்வைத் தராது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## அன்னையின் கைகள்

ஒரு இளைஞன் நன்றாகப் படித்து, ஒரு பெரிய கம்பெனியில் மனேஜர் வேலைக்கு விண்ணப்பித்திருந்தான். அவன் முதல் நேர்முகத் தேர்வை நன்றாகவே செய்தான். அந்த கம்பெனியின் நிர்வாகி, இறுதி நேர்முகத் தேர்வை நடத்தி தன் முடிவை எடுத்தார். நிர்வாகி இளைஞனின் விண்ணப்பத்திலிருந்து தெரிந்து கொண்டது யாதெனில், அவன் பள்ளிப் படிப்பிலிருந்து பட்டதாரிப் படிப்பு வரை ஒரு வருடம்கூட குறைந்த மதிப்பெண்கள் பெற்றதில்லை.

நிர்வாகி அவனிடம், உனக்குப் பாடசாலையில் படிப்பு உதவித்தொகை ஏதேனும் கிடைத்ததா? என வினவினார். அதற்கு அவன் இல்லை என்று பதிலளித்தான்.

அப்படியானால், "உன் தந்தை பாடசாலைத் தொகை கட்டினாரா?" என நிர்வாகி கேட்டார். அதற்கு அந்த இளைஞன், எனக்கு ஒரு வயது இருக்கும் போதே என் தந்தை இறந்து விட்டார். என் தாயார் தான் என்னை பார்த்துக் கொண்டார் என்றான்.

தாயார் எங்கு வேலை செய்கிறார் என்று நிர்வாகி விசாரித்த பொழுது, அவன் "என் தாயார் சில வீடுகளில் பாத்திரம் தேய்த்தும் துணிகளை வெளுக்கும் வேலைகளையும் செய்கிறார்." என்று பதிலளித்தான். அதற்கு நிர்வாகி இளைஞனிடம் அவனது கைகளைக் காண்பிக்கச் சொன்னார். கைகள் மிருதுவாகவும், சுத்தமாகவும் காணப்பட்டன.

உடனடியாக நிர்வாகி, "உன் தாயாருக்குத் துணி வெளுப்பதில் எப்போதேனும் ஏதாவது உதவி செய்திருக்கிறாயா?" எனக் கேட்டார். அந்த இளைஞன் மறுத்தவாறே, "என் தாயார் படிப்பில் மென்மேலும் அக்கறையை செலுத்தச் சொன்னார்." என்று கூறினான். நிர்வாகி இளைஞனிடம் ஒரு வேண்டுக்கோள் விடுத்தார். அன்று இரவு தாயாரின் கைகளை சுத்தப்படுத்த உதவி செய்து, மறுநாள் காலை அவரை சந்திக்குமாறு கூறினார்.

இளைஞன் மனதில் யோசனை செய்து கொண்டே, தனக்குக் கட்டாயம் இந்த வேலை கிடைத்துவிடும் என்ற பூரிப்பில் வீடு சென்று தாயாரின் கைகளை சுத்தப்படுத்த ஆவல் கொண்டான்.

தாயாருக்கு ஒருபுறம் சந்தோஷமும், மறுபுறம் பயமும் தோன்ற, கைகளை மகனிடம் காட்டினார். அவன் தாயாரின் கைகளை நிதானமாக சுத்தப்படுத்தத் தொடங்கினான்.

அவன் கண்களிலிருந்து கண்ணீர் முத்து முத்தாகத் தாயாரின் கைகளில் விழத் தொடங்கியது. தாயாரின் கைகளின் சுருக்கங்களையும், காயங்களையும் முதன் முறையாக மகன் கண்டான். சில காயங்களின் வலி மிக அதிகமாக இருந்தது. கண்ணீர் பட்டதும் தாயார் சிலிர்க்கத் தொடங்கினார்.

இளைஞன் முதல் முறையாகத் தன் கல்விக்காகத் தாயார் பட்ட துயரங்களை அறிந்தான். அவன் தாயார் செய்த தியாகங்களை நினைவுபடுத்திக் கொண்டு, கையில் இருக்கும் காயங்களை நினைத்து வருந்தி, தன் மேற்படிப்பிற்கும், எதிர்காலத்திற்கும், அவன் தாயார் துணி வெளுத்து கஷ்டப்பட்டதை புரிந்துகொண்டான்.

கைகளை சுத்தப்படுத்திய பிறகு, மீதியிருந்த துணிகளைத் தானே துவைத்து வைத்தான். தாயும், மகனும் அன்று இரவு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தனர். மறுநாள் காலை இளைஞன் காரியாலயத்திற்குச் சென்று நிர்வாகியை சந்தித்தான். இளைஞனின் கண்ணீரைக் கண்டதும், நிர்வாகி அவனிடம் நடந்த விடயங்களைக் கேட்டறிந்தார்.

அவன் எண்ணத்தை நிர்வாகி கேட்ட போது, இளைஞன் முதலாவதாக பாராட்டு என்றால் என்னவென்று அறிந்தேன். தாயாரின் உழைப்பு இல்லாவிட்டால் இந்த அளவுக்கு என்னால் வெற்றி பெற்றிருக்க முடியாது. இரண்டாவதாக, தாயாருடன் சேர்ந்து எப்படி உதவி செய்வது என்று அறிந்தேன். ஒரு காரியம் வெற்றி அடைய என்னென்ன துன்பங்களை சந்திக்க வேண்டும் என புரிந்து கொண்டேன்.

மூன்றாவதாக, குடும்பம், உறவு இவற்றின் முக்கியத்துவத்தையும் அறிந்தேன் என்று சொன்னான்.

நிர்வாகி, பிறருடைய வேலையைப் பாராட்டி, அவர்களின் கஷ்டங்களையும், உணர்வுகளையும் புரிந்துகொள்ளும் ஒரு நபரையே தேர்வு செய்ய எண்ணினேன். பணம், செல்வம் தான் இலட்சியம் என எவரும் எண்ணக்கூடாது. நான் உன்னைத் தேர்வு செய்கிறேன் என்று கூறினார்.

# கவிதைக் கலசம்

## எதற்கு நீ வேண்டும்



பூவோடு தேன் சேர வேண்டும்
புன்னகையோடு மனமிணைய வேண்டும்
வாழ்வோடு வளர்ச்சியுயர வேண்டும்
வறுமைக்குள்ளும் செழிப்பிருக்க வேண்டும்
மழையில் நிலமது நனைய வேண்டும்

மறுமலர்ச்சியில் வாழ்வியல் முன்னேற்றம் காண வேண்டும்
காற்றோடு குளிர் சேர்ந்திட வேண்டும்
காதோரம் நல்ல சேதி வந்தாக வேண்டும்
கவிதைக்குள்ளும் இனிமை கலந்திருக்க வேண்டும்
பயம் போக வீரம் விளைய வேண்டும்

பகைவனையும் நீ மன்னித்து பகை மறக்க வேண்டும்
பாசத்தோடு பகுத்தறிவைச் சேர்க்க வேண்டும்
துன்பத்தை மனதிலிருந்து விலக்க வேண்டும்
துஷ்ரரோடு நற்புறவை நிறுத்த வேண்டும்
குற்றத்தை பொறுத்தாள வேண்டும்

குடும்பத்தோடு கலந்தாலோசித்து
நற்செயல்களுக்கு முடிவு எடுக்க வேண்டும்
பொறுப்போடு வாழ்வில் பயணிக்க வேண்டும்
பொறுமையாக செயற்பாடுகளுக்காக சிந்திக்க வேண்டும்

கவியரசன் K.J. றெக்ஸ் - அக்கராயன் குளம்

## கணிதச் சாரம்

கணக்கு தெரிய வேண்டும் - அது
கல்வியால் மட்டும் கிடைத்த தென்றில்லை
நாளாந்த வாழ்க்கையில்
நாம் கற்றதைக் கொண்டே
முயற்சியும் கொஞ்சமிருந்தால்
முன்னே வரமுடியும்
குடும்ப வாழ்க்கைக்கு
குறிப்பாக தேவையிது
உலகம் சுருங்குகிறது
உங்களையும் உள்ளீர்த்து
சற்றேனும் வறிய வாழ்வு மீள
சக்கரங்கள் கணிதங்களே
கணக்காய் வகுத்தவன் மீள்வான்
கணக்கின்றி நடப்போன் மாழ்வான்



விநாயகர் சாந்தை
மு.ரமேஷ்

அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
அரசியல் இலக்கியம் கவிதை கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா



**ராஷ்மி காவையும்** பேய் விட்டு வைக்க வில்லை. ஹிந்தியில் **'Thama'** என்ற படத்தில் பேயாக நடிக்கிறார். ஆயுஷ்மான் குரானா நடிப் பில் ரொமாண்டிக் காமெடி ஹொரர் படமாக ஒக்டோபரில் வெளியாகிறது. அதற்கு முன் அவரது ஹீரோ யின் - சென்ட்ரிக் படமான "தி கேர்ள் ஃப்ரெண்ட்"டை திரைக் குக் கொண்டு வரவும் முயற்சிகள் நடக்கி ன்றன.



**இயக்கு நர் ஷங்கரின்** மகன் அர்ஜித் நடனப் பயிற்சி, சண்டைப் பயிற்சி, தெளிவான தமிழ் உச்சரிப்புப் பயிற்சி என பிஸியாக இருக்கி றார். ஷங்கரின் நம்பிக்கைக்குரிய அசோசியேட்களிடம் ஆலோசனை பெறுகிறார் அர்ஜித். இயக்குநர் அட்லி, அர்ஜித்தை தானே அறி முகப்படுத்துவதாகக் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே அட்லி தயாரிப்பில் அறி முகமாகிறார்.



**"அரசி யலுக்கு** இறங்குவதற்கு முன் கடைசிப் படம்" என்கின்ற வகையில் விஜயின் "ஜனநாய கன்" பரபரப்பாக மெருகேறி வருகிறது. அனிருத் இசையில், மலையாள தேசத்தைச் சேர்ந்த பிரபல ராப் பாடகர் "ஹனுமேன் கைண்ட்" ஒரு பாடலைப் பாடி யிருக்கிறார். ஆல்பத்திலேயே அந்தப் பாடல் பிரமாதமாக வந்திருப்பதாக யூனிட்டில் குதூகலிக்கிறார்கள்.



**"கூலி"** படத்தில் பூஜா ஹெக்டே நடனமா டிய "மோனிகா" பாடல் யூடியூபில் 100 மில்லியன் பார்வையாளர்களைத் தாண்டி விட்டது. இதைய டுத்து, ஹிந்திப் படங்களில் ஒரு பாடல் டான்ஸுக்கான வாய்ப்புகள் பூஜாவுக்குக் குவிகின்றன. ஆனால், "அது, ரஜினி சார் படத்துக்காக ஆடிய டான்ஸ். இனி ஹீரோயின் வாய்ப்புகளுக்கே முன்னு ரிமை" என்று சொல்லி வருகிறாராம். பூஜா.



**கர்நா டக அரசின்** மைசூர் சாண்டல் சோப் விளம்பரத் தூதுவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார் தமன்னா. இதையொட்டி நடந்த பிரஸ்மீட்டில், "எனக்குத் தமிழ்ப் படத்தில் நடிப்ப தென்றால் ரொம் பவும் இஷ்டம். அடுத்ததாக, ஒரு தமிழ்ப் படத்தில் நடிக்க விருப்பம் இருக்கிறது" என்று தமிழ் மணக்கப் பேசி யிருக்கிறார் அவர்.



**கார்த்தி** நடிக்கும் "வா வாத் தியாரே", "சர்தார் 2" படங்களின் வேலை கள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டன. அடுத்து, தமிழ் இயக்கத்தில் கார்த்தி நடிக்கும் பெயரிடப்படாத படத்தின் வேலைகள் தொடர்கின்றன. கையில் இத்தனை படங்கள் இருந்தாலும், அடுத்தடுத்த படங்களைப் பற்றிய விவாதத்தில் இருப்ப தோடு, "மிஸ்டர் கூல்" என வலம் வருகிறார்.

# சின்னத்திரை டைரி

## அனுஷா





**ஷூட்டிங் இல்லாத நாட்களில்:** கர்நாடகா போய்விடுவேன். அங்கே எங்கள் ஊரிலே விவசாயம் தொடர்பான வேலையில் ஈடுபட ரொம்பவே பிடிக்கும்.

**பொழுதுபோக்கு:** ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லங்களுக்குப் போய் அவர்களுடன் நேரத்தைச் செலவு செய்வேன்.

**ப்ளஸ்:-** தன்னம்பிக்கை. எனக்கு நம்பிக்கை அதிகம்.

**மைனஸ்:** கோபம். சமயத்தில் ரொம்பவே அதிகம் வருகுது. கன்ட்ரோல் செய்ய முடியவில்லை.

**எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிட்டி:** படித்த காலத்தில் ஓட்டம், கபடி யில் நான் கில்லாடி. இப்போது சீரியலில் சண்டைக் காட்சிகளில் அது ரொம்பவே உதவுது.

**பெரிய ஆசை:** ஸ்பெஷலாக எதுவும் இல்லை. சீரியலோ சினி மாவோ நடித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

## சரண்யா



பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போது கண்பார்வையில் பிரச்சினை உண்டாகி கண்ணாடி போட வேண்டி வந்தது. எனக்குத் தெரிந்து பன்னிரண்டாவது படிக்கின்ற வரைக்கும் கண்ணாடி போட்டிருந்தேன். வகுப்பில் சக மாணவர்கள் "புட்டி" என்று கிண்டல் செய்வார்கள். ஆனால் படிப்பில் கில்லியாக இருந்து கிளாஸ் லீடராக எல்லாம் இருந்ததால், இந்தக் கலாய்களையெல்லாம் இடது கையால் தட்டிவிட்டுட்டுப் போய்க் கொண்டே இருந்தேன். ஸ்கூல் முடிந்து காலேஜ் சேரும்போது லேசர் சிகிச்சை செய்து கண்ணாடி தேவையில்லை என்கின்ற நிலை வந்தது. ஆனால் அப்போதும் கேலி கிண்டல் செய்தார்கள். பல வருடமாக கண்ணாடியிலேயே என்னைப் பார்த்தவர்களுக்கு கண்ணாடி இல்லாத என் முகம் புதுதாகத் தெரிய, அதையும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். இந்த நாட்கள் "புட்டி" என்று கேலிக்கு ஆளான நாட்களைவிட அதிகமாக வலித்தது. ஒருவழியாக எல்லாவற்றையும் கடந்து வந்துவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

462

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## வளரும் குழந்தைகளின் மனம் வளம்பெற

வளரும் குழந்தைகளின் மனதிலே பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்கள் என்ற மனப்பதிவே இருந்து கொண்டிருக்கும். தம்மை எந்தக் கஷ்டத்திலிருந்தும் பாதுகாப்பார்கள், தாம் விரும்புவதை செய்து தருவார்கள், சரியான பாதையிலே நடத்துவார்கள், நிலாவைக் கூடக் கையில் பிடிக்கும் வல்லமை உள்ளவர்கள், அவர்கள் செய்வதெல்லாம் நல்ல விடயங்களாகத்தான் இருக்கும் என்றெல்லாம் நம்பி கொள்வார்கள்.

இவ்வாறான ஒரு நிலையில் இந்தக் குழந்தைகளுக்கு முன்னால் பெரியவர்கள் சின்னத்தனமாக நடந்து கொள்ளும் பொழுதும் தம்மிடையே சண்டை செய்யும் பொழுதும், அழும் பொழுதும், தமது இயலாமையை வெளிப்படுத்தும் பொழுதும், தீய நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுதும் குழந்தைகளின் மன ஓட்டம் குழப்பமடையும்.

இவர்களால் தம்மை பாதுகாக்க முடியுமா என்ற பாதுகாப்பற்ற தன்மை தோன்றும். அந்த சிறிய மனங்களிலே தீய விடயங்கள் ஆழப்பதியும். இது அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பெரும் பாதகமாக அமையும். எனவே சிறுவர் முன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் பற்றி சிந்திப்பது பயன் தரும்.

நாம் எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் வழிநடாத்த அல்லது நல்வழிப்படுத்த முயலும் பொழுது இன்னொருவருடன் ஒப்பிட்டு பேசும் பழக்கத்தை வளர்த்து வைத்திருக்கின்றோம். இது ஒரு வேதனையான உண்மை.

மனிதன் ஒவ்வொருவரும் தனித்துவமானவன். அவனின் ஆற்றலும் ஆழுமையும் கூட தனித்துவமான வைதான். ஒவ்வொரு மனிதனுள்ளேயும் அவனுக்கே உரித்தான பல திறமைகள் புதைந்திருக்கின்றன. ஒருவன் போன்று இன்னொருவன் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை.

அவ்வாறு இருக்கவும்முடியாது.



"அவனைப்பார் 4 மணிக்கு எழும்பிப்படிக்கின்றான் ஆனால் நீ?, அவன் உடைய எழுத்தைப் பார் உன்னுடைய எழுத்தையும் பார், அவன் எழும்பி எவ்வளவு உசாராய் கதைக்கின்றான் அவனைப் பார்த்து பழகு, அந்தக் காலத்திலே நான் என்னமாதிரி எல்லாம் செய்தனான் ஆனால் நீ...?

இவ்வாறாக ஒருவனைப்போல இன்னொருவனை படம் போட்டு மாற்றுவதற்கு கடுமையாக முனைந்து நிற்கின்றோம். எதற்கு எடுத்தாலும் ஒப்பிட்டு கதைப்பதை அன்றாட நடவடிக்கையாகக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவனிற்கான அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அவன் சார்ந்த அவனது நிறைகுறைகள் சார்ந்ததாக அவனது சுபாவம் சார்ந்ததாக இருக்க வேண்டுமே அன்றி ஒப்பிடும் பொறிமுறையாக இருக்க முடியாது. ஒப்பிட்டு அறிவுரை சொல்ல முயல்வது அவர்களைக் காயப்படுத்தி பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுடன் குளிக்கபோய் சேறு பூசிய கதைபோல அல்லது பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிய கதைபோல் ஆகிவிடுவதுடன் அது அவர்களின் பல சுகாதாரப்பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும்.

ஒப்பிட்டு பேசுவதால் ஏற்படும் தீயவிளைவுகளை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமானவை மனக்குழப்பம், விரக்தி , பொறாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு, கற்றல் செயற்பாடுகளில் ஆர்வக்குறைவு போன்றவையாகும். சகோதரர்களிடையே பொறாமை உணர்வு வளர்வதற்கும் இது காரணமாகிவிடுகின்றது.

பிள்ளைகளை வழிநடத்தும் போது எமது முக்கியமான இலக்கு எதுவாக இருக்கவேண்டும் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும். இந்த இலக்கு பரீட்சைகளில் சித்திபெறுவதா? உயர்கல்வி கற்பதா?, போட்டிகளில் வெற்றி பெறுவதா? , செல்வம் சேர்ப்பதா?, அல்லது நல்ல மனம் கொண்ட மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக உருவாகுவதா ? என்பதை தீர்மானிக்க வேண்டும். ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு ஒப்பிட்டு பேசப்படும் பேச்சு உதவியாக அமையாது.

சுயமாக ஒருவன் சிந்தித்து வாழ்வில் உயர்ச்சி அடைவதற்கு அவனில் உள்ள திறமைகள் அடையாளப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

அந்தத் திசையிலே அவனை முன்னேறுவதற்கு அவன் சார்ந்த அறிவுரைகளும் வழி காட்டல்களும் உதவியாக இருக்கும். ஆனால் இது ஒரு பொழுதும் ஒப்பிட்டுப் பேசும் பேச்சாக அமைந்து விடக்கூடாது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

---

சிலருக்கு பால்குடிக்கும் போது சளிபிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பசுப்பாலிற்கு அவர்களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகையான வெளிப்பாடாகும்.

பால்குடிக்கும்போது சளிபிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது.

எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டு பால்மா வகைகள் அல்லது ஆட்டுப் பாலைப் பாவித்து பாருங்கள் அதனால் உங்களிற்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம்.

உங்களிற்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்த்த உணவுவகைகள் அனைத்திற்கும் ஒவ்வாமை வகையான தாக்கம் ஏற்படின் பால் உற்பத்திப் பொருட்களைப் பாவனையை முற்றிலும் நிறுத்திவிட்டு வேறு வகையான புரதங்களை, சோயா, பால், முட்டை, மீன், என்பவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

Dr சி.சிவன்சுதன்
பொதுமருத்துவ நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் அவற்றுக்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புரிமைகள் ரத்து

# அரச வாகனத்தை மீளவும் ஒப்படைத்த ஹேமா பிரேமதாச

(கொழும்பு)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச, அரசாங்கத்தினால் தனக்கு கொடுக்கப்பட்ட வாகனத்தை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்வதற்காக அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதனால் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட வாகனத்தை மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச மீண்டும் அரசாங்கத்திடமே ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (நி)

# பேருந்துகளை அலங்கரிக்க அனுமதி வழங்கிய சுற்றறிக்கை ரத்து!

(கொழும்பு)

பேருந்துகளை அலங்கரிக்க அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ரத்து செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்கவின் கையொப்பத்துடன் தொடர்புடைய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2023 ஜூன் 2 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எதிர்வரும் 9ஆம் திகதி முதல் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக, பேருந்துகளின் அலங்காரம் மற்றும் உதிரிப் பாகங்களை நிறுவுதல் தொடர்பான சட்ட விதிகளுக்கு அனுமதி வழங்கி தொடர்புடைய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இருப்பினும் இந்த புதிய சுற்றறிக்கையில் இவை தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 250 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 150 | 170 | 160 |
| தக்காளி | 250 | 200 | 150 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 250 | 250 | 180 | 250 |
| கரட் | 250 | 330 | 300 | 280 | 350 |
| பூசணி | 80 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 150 | 150 | 150 | 120 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 150-300 | 250 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 190 | 150 | 140 | 150 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 600 | 400 |
| வெண்டைக்காய் | 150 | 140 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 280 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 350 | 300 | 350 | 500 |
| லீக்ஸ் | 250 | 200 | 300 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 200 | 80 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 300 | 180 | 350 |
| போஞ்சி | 400 | 500 | 350 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 300 | -- | 150 |
| கீரை – 1 பிடி | 120 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 1000 | 500 | 600 | 1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 200 | 150 | 230 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | -- |

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## பதவி வெற்றிடங்கள்
## SOS சிறுவர் கிராமம்-யாழ்ப்பாணம்

SOS சிறுவர் கிராமமானது பெற்றோர்களை இழந்த, பெற்றோரால் கைவிடப்பட்ட, கைவிடப்படும் ஆபத்தான நிலையிலுள்ள சிறுவர்களை குடும்ப சூழலில் பூரண பாதுகாப்புடன் கூடிய பராமரிப்பு, கல்வி, மருத்துவ சேவைகளை வழங்கும் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் 138 நாடுகளிலுள்ள இலங்கையில் 44 வருடங்களாகவும் சேவையை வழங்கி வருகின்ற ஓர் சர்வதேச அரச, மத சார்பற்ற அமைப்பாகும்.

**பதவி வெற்றிடங்கள்**

**1. அன்னை (CARE GIVER) (28 - 47 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம்**

**தகைமை.**

- திருமணமாகாத, ஆகியிருப்பின் விதவையான/ விவாகரத்து பெற்றிருப்பதோடு தனக்கென பிள்ளைகள் கொண்டிராதிருப்பதோடு குடும்பச்சுமைகள்/ பொறுப்புக்களற்றவராகவும், சிறுவர்களுக்கான அன்பு ஆதரவளித்து நல்வழி காட்டும் பொருட்டு நற்தேகாரோக்கியமும் நற்பண்புகளையும் கொண்டுள்ளவராகவும், எழுத்தறிவாற்றலுள்ளவராக இருத்தல்.

இந்நிறுவனத்தின் சேவையாற்ற விரும்புவோர்/ இப்பதவிக்கு நீங்கள் பொருத்தமானவர் எனக் கருதும் பட்சத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2. முன் பள்ளி ஆசிரியை (35 வயதிற்கு உட்பட்ட பெண்) -யாழ்ப்பாணம்**

**தகைமை**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்தது முன்பள்ளிக்கற்கை நெறியில் Diploma சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

மேற்குறிப்பிட்டுள்ள பதவிக்கான விண்ணப்பங்களை **(தொலைபேசி இலக்கத்துடன்)** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

SOS Children's villages Sri Lanka is committed to protecting in staff programme participants and the communities we serve (both children and adults) from harm from child abuse, sexual harassment, exploitation, abuse and all other types of harm. Every individual who joins SOS Children's Villages Sri Lanka should understand his / her responsibility in ensuring a safeguarding environment. The highest standards of selection, recruitment and authentication procedures will be applied for all employment opportunities, including thorough cross-checking of references and submitting a current police clearance certificate.

**தொடர்புகளுக்கு:** **தொ.பே: 021-221 1101**
**SOS சிறுவர் கிராமம்,** **077-373 3711**
**இல:219, நாயன்மார்கட்டு,** **மின்னஞ்சல்:**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (C-3863) Careers@soscvsrilanka.org.

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## பதவி வெற்றிடங்கள்
## BRAND PROMOTION EXECUTIVE
## SOS சிறுவர் கிராமம்-யாழ்ப்பாணம்

SOS சர்வதேச ரீதியில் 138 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பெற்றோரை இழந்த, இழக்கும் ஆபத்து நிலையில் உள்ள சிறுவர்களுக்கு பூரண பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்கி வருகின்ற இந்நிறுவனத்தின் இலங்கையின் ஓர் பிராந்தியமான SOS சிறுவர் கிராமம் யாழ்ப்பாணத்தின் Brand Promotion Executive ஆக பணியாற்ற விரும்பும் கீழ்க்கொண்ட தகைமையுடைய எவரும் நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றும் வாய்ப்பு.

**அடிப்படைத் தகமைகள்**

- கல்வித்தகைமை: க.பொ.த உ/தரம்
- வயது: 19 வயதிற்கு மேற்பட்டோர்
- சிறந்த தொடர்பாடல் திறமை
- மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்/ சிங்களம் (ஒன்றுக்கு மேற்பட்ட மொழியறிவுக்கு முன்னுரிமை)
- தொடர்பாடல் மற்றும் வணிக ரீதியான ஈடுபாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சலுகைகள்**

சேவைக்காலத்தின் பின் சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய அனுபவக்கடிதம், கவர்ச்சிகரமான அடிப்படைச்சம்பளம், ஊக்குவிப்புத்தொகை, EPF & ETF, திறன்விருத்திப் பயிற்சிகள் மற்றும் மருத்துவக்காப்புறுதி என்பன வழங்கப்படும்.

SOS Children's villages Sri Lanka is committed to protecting in staff programme participants and the communities we serve (both children and adults) from harm from child abuse, sexual harassment, exploitation, abuse and all other types of harm. Every individual who joins SOS Children's Villages Sri Lanka should understand his / her responsibility in ensuring a safeguarding environment. The highest standards of selection, recruitment and authentication procedures will be applied for all employment opportunities, including thorough cross-checking of references and submitting a current police clearance certificate.

**தொடர்புகளுக்கு:** **தொ.பே: 021-2211101**
**SOS சிறுவர் கிராமம்,** **077-3733711**
**இல:219, நாயன்மார்கட்டு,** **மின்னஞ்சல்:**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (C-3862) Careers@soscvsrilanka.org.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாள இடைக்கால பிரதமருக்கு ஜனாதிபதி அநுர வாழ்த்து

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க, நேபாளத்தின் இடைக் கால அரசாங்கத்தின் புதிய பிர தமராக நியமிக்கப்பட்டுள்ள சுசீலா கார்க்கிக்கு வாழ்த்து தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்து ள்ளார்.

சுசீலா கார்க்கி அவர்கள் நேபா ளத்தின் பிரதமராகப் பொறுப் பேற்றதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது தலைமை, நேபா ளத்தை அமைதி மற்றும் ஜன நாயகத்திற்கு இட்டுச்செல்லும் என நாங்கள் முழுமையாக நம்புகி றோம்," என்று ஜனாதிபதி பதி விட்டுள்ளார். (நி)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 18 பில்லியன் ரூபாய் இலாபம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதிக்குள் 18 பில்லி யன் ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளதாக அறிவித்துள் ளது.

பெற்றோலியத் துறையை மேலும் மேம்படுத்துவதற் காகவும் பல திட்டங்களைத் தொடங்குதற்காகவும் இந்த இலாபம் பயன்படுத்தப்படு வதாக இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரி மயூர நெத்தி குமார தெரிவித் தார்.

எரிபொருள் தளவாடங் களை மேம்படுத்துதல் மற்றும் விமானப் போக் குவரத்து நடவடிக்கைகளை மேம்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட முத்துராஜவெலமுனை யத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வரை விமான எரிபொருள் குழாய் அமைக்கும் திட்டங்களை யும் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (நி)

# 800 மில்லியன் ரூபா முறைகேடு சிக்குவாரா அர்ஜுன ரணதுங்க?

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் அர் ஜுன ரணதுங்க மற்றும் அவரது சகோதரர் தம்மிக்க ரணதுங்க மீது சுமத்தப்பட்டுள்ள 800 மில்லியன் ரூபாய் நிதி முறைகேடு குற்றச் சாட்டுகள் குறித்த விசாரணையை விரை வுபடுத்துமாறு சிவில் புல னாய்வு முன்னணி, இலஞ்ச ஒழி ப்பு அல்லது ஊழல் குற்றச்சாட்டு களை விசாரிக்கும் ஆணை யத்தி டம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை முன் வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னணி யின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சய மஹாவத்த, அர்ஜுன ரணதுங்க கனிமவள மேம்பாட்டு அமைச் சராகப் பதவி வகித்த காலத்தில் இந்த நிதி முறைகேடு நடந்ததாகத் தெரி வித்தார்.

அந்த நேரத்தில் தம்மிக்க ரணதுங்க பெட்ரோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவராகச் செயற் பட்டதாகவும், இந்த இரு சகோ தரர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்ட தாகவும் அவர் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு இந்த சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட புகார் மீதான விசா ரணை தற்போது தேக்கமடை ந்துள்ளதாகவும், விசாரணை இவ்வாறு தேக்கமடைந்திருப்பது சந்தேகத்திற்குரியதாக கருதப்பட வேண்டும் என்றும் மஹாவத்த மேலும் வலியுறுத்தினார். (நி)

# வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஜெயக்கொடி குரு நாகல் மாவட்டத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டுள் ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற் றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரியாக மாத்தளையில் கடமையாற்றிய பீ.எஸ். டிறட்ரண நியமிக்கப்பட் டுள்ள நிலையில் அவர் விரைவில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# மகாலக்சுமி சிலை பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து மன்றத்தினரால் ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரர் ஆலய மகாலக்சுமி சிலை பிரதி ஷ்டை நிகழ்வு இன்று ஞாயிற் றுக்கிழமை ரோகிணி நட்சத் திரமும் அமிர்த யோகமும் சிங்க லக்னமும் கூடிய காலை 6.10 மணி முதல் 7.50 மணி வரை யுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது. (3)

# 2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணை அட்டவணை

இலங்கையின் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளை உள்ளடக்கிய வகையில் 2026 ஆம் ஆண்டிற்கான பாடசாலை நாட்காட்டியை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. (நி)

**சிங்களம் மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கு**

| தவணை | தவணை நடைபெறும் காலப் பகுதி |
|---|---|
| முதலாம் தவணை | முதலாம் கட்டம்<br>2026.01.01 வியாழன் முதல் 2026.02.13 வெள்ளி வரை<br>**(2026.02.14 ம் திகதி முதல் 2026.03.02 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | இரண்டாம் கட்டம்<br>2026.03.03 செவ்வாய் முதல் 2026.04.10 வெள்ளி வரை<br>**(2026.04.11 ம் திகதி முதல் 2026.04.19 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| இரண்டாம் தவணை | 2026.04.20 திங்கள் முதல் 2026.07.24 வெள்ளி வரை |
| மூன்றாம் தவணை | முதலாம் கட்டம்<br>2026.07.27 திங்கள் முதல் 2026.08.07 வெள்ளி வரை<br>**(2026.08.08 ம் திகதி முதல் 2026.09.06 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | இரண்டாம் கட்டம்<br>2026.09.07 திங்கள் முதல் 2026.12.04 வெள்ளி வரை |

**முஸ்லிம் பாடசாலைகளுக்கு**

| தவணை | தவணை நடைபெறும் காலப் பகுதி |
|---|---|
| முதலாம் தவணை | முதலாம் கட்டம்<br>2026.01.01 வியாழன் முதல் 2026.02.13 வெள்ளி வரை<br>**(2026.02.14 ம் திகதி முதல் 2026.03.22ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | இரண்டாம் கட்டம்<br>2026.03.23 திங்கள் முதல் 2026.04.10 வெள்ளி வரை<br>**(2026.04.11 ம் திகதி முதல் 2026.04.19 ம் திகதி முதல் விடுமுறை வழங்கப்படும்)** |
| | மூன்றாம் கட்டம்<br>2026.04.20 திங்கள் முதல் 2026.04.30 வியாழன் வரை<br>**(2026.05.01 ம் திகதி முதல் 2026.05.03 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்.)** |
| இரண்டாம் தவணை | முதலாம் கட்டம்<br>2026.05.04 திங்கள் முதல் 2026.05.26 வியாழன் வரை<br>**(2026.05.27 ம் திகதி முதல் 2026.05.31ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | இரண்டாம் கட்டம்<br>2026.06.01 திங்கள் முதல் 2026.07.31 வெள்ளிக் வரை |
| மூன்றாம் தவணை | முதலாம் கட்டம்<br>2026.08.03 திங்கள் முதல் 2026.09.02 புதன் வரை<br>**(2026.09.03 ம் திகதி முதல் 2026.09.06ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | இரண்டாம் கட்டம்<br>2026.09.07 திங்கள் முதல் 2026.12.04 வெள்ளி வரை |

# முன்னாள் ஜனாதிபதிகளுக்காக 8 வருடங்களில் மட்டும் 490 மில்லியன் ரூபா செலவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கான பராம ரிப்புக்காக 490 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மாக நிதி செலவிடப்பட்டுள்ளது.

2017 முதல் 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் வரையான காலப் பகுதியில் இந்த பணம் செலவிடப்பட் டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச, ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச ஆகி யோரின் ஓய்வூதியங்கள், வாகனங்கள் மற்றும் பிற தொடர்ச்சியான செலவுகள் இவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளன.

அரசாங்கம் வெளியிட்ட அறி க்கையின்படி, ஹேமா பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் 2017 முதல், மைத் திரிபால சிறிசேன 2019 முதல், கோட்டாபய ராஜபக்ச 2022 ஆம் ஆண்டு முதல் மற்றும் ரணில் விக்கிரமசிங்க 2024 ஆம் ஆண்டு முதல் இந்த சலுகை களைப் பெற்றுள்ளனர். (நி)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

அமரர். சி. கண பதிப் பிள்ளை நினைவாக கண பதி அறக்கட்டளை யின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

நாளை மறு தினம் செவ்வாய்க் கிழமை வடமராட்சி தெற்கு மேற்கு பிர தேச சபை மண்ட பத்தில் காலை 8 மணிமுதல் 2 மணி வரை இடம்பெற வுள்ளது. (3-60)


31ம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 30.03.1934

இறைவன் அடியில் 15.08.2025

அமரர் பரமநாதன் கமலாம்பிகை



எமது பாடசாலை ஆசிரியை திருமதி.மனோகரி தயானந்தராசா அவர்களின் பாசமிகு மாமியார் அமரர்.பரமநாதன் கமலாம்பிகை அவர்களை 31 ஆம் நாளில் (2025.09.14) நினைவு கூறுகின்றோம்.

(C-3865)

பாடசாலைச் சமூகம் யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தங்களது ஒவ்வொரு செயல்களின் மூலம் மகிழ்ச்சியைப் பரப்புபவர்களே மேன்மையானவர்கள்.

- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## மறதி நியாயமானதுதான் அதற்காக மகிந்தவின் மறதி

மறதி என்பது இறைவனால் தரப்பட்ட கொடை. ஆம் மறதி இருப்பதனாலேயே நாம் மனிதர்களாக நடமாடுகின்றோம்.

மறதி இல்லை என்று வைத்துக் கொண்டால், நிலைமை எப்படியாக இருக்கும் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

ஆக, மறதி காரணமாகவே நாம் துன்பங்களையும் துயரங்களையும் மறந்து வாழமுடிகிறது.

இதை நாம் சொல்வதற்காக எல்லாவற்றையும் மறந்துவிடலாமா? என்றால் அதுதான் இல்லை.

இங்குதான் வள்ளுவன் நம்மை வழிப்படுத்துகின்றான்.

**நன்றி மறப்பது நன்றன்று**
**நன்றல்லது அன்றே மறப்பது நன்று**

அதாவது ஒருவர் செய்த நன்றியை ஒரு போதும் நாம் மறந்துவிடக்கூடாது. மாறாக, ஒருவர் எமக்குச் செய்த தீமையை அன்றே மறந்து விட வேண்டும்.

ஆக, மறக்கக்கூடியது எது? மறக்கக்கூடாதது எது? என்பதை வள்ளுவன் வகைப்படுத்துகிறான்.

ஆம், மறதி நியாயமானதென்பதற்காக மற்றவர்கள் நமக்குச் செய்த உதவியை - நன்றியை நாம் மறந்தால் அது எமக்கு உய்வைத் தரமாட்டாது.

இதை நாம் கூறுகின்றபோது இங்கு **மறதி** பற்றி எதற்கு என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரச மாளிகையில் இருந்து வெளியேறி இப்போது தங்காலையில் குடியமர்ந்துள்ளார்.

அவர் அரச மாளிகையை விட்டு வெளியேறும்போது, அவரின் ஆதரவாளர்கள் சிலர் அவரைச் சூழ்ந்து கொண்டு தங்களின் கவலையை வெளிப்படுத்தினர். கூடவே மகிந்தவுக்கு ஆதரவாகக் கோசம் எழுப்பினர்.

இதனைப் பார்த்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பரவசமடைந்து போனார்.

ஜனநாயகத்துக்கு ஆபத்து என்றால், நான் மீண்டும் எழுவேன் எனச் சூளுரைத்தார்.

எழுந்து நடமாடுவதற்கே அல்லாடும் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியது கேலிக்குரியதாக இருந்தாலும் ஜனநாயகத்துக்கு ஆபத்து என்றால் மீண்டும் நான் எழுவேன் என்று அவர் கூறியதுதான் இந்த நூற்றாண்டின் முதற்தர நகைச்சுவையாகும்.

ஆம், மகிந்த ராஜபக்ஷ தரப்பை வீட்டுக்கு அனுப்பி வைத்ததே ஜனநாயகம்தான்.

அன்று அரகலப் போராட்டம் எழுச்சி கொண்டதால் மகிந்த தரப்பு பின்வாசலால் தப்பியோடியது.

கொலை, ஊழல், குடும்பஆட்சி, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் எனப் பல்வேறு குற்றச் சாட்டுக்களை முன்வைத்து இலட்சக்கணக்கான மக்கள் கொண்ட பேரெழுச்சி, ஊழல்வாதிகளை நாட்டை விட்டுத் துரத்தியது.

இதன் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ தரப்பு ஆட்சியை இழந்து நிற்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், மீண்டும் எழுவேன் எனக் கூறுகின்ற அளவில் ஏலவே நடந்த மக்கள் போராட்டத்தை - ராஜபக்ஷவின் சிலை உடைத்து விழுத்தப்பட்டதை - அரசியல்வாதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டதையெல்லாம் மகிந்த மறப்பதென்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

## வெள்ள நீரோட்டத்திற்கான தடைகளை 14 நாட்களுக்குள் அகற்றுக

### நல்லூர் பிரதேசசபை அறிவிப்பு

வெள்ள நீரோட்டத்திற்கு இடையூறாக இருக்கின்ற தடைகளை எதிர்வரும் 14 நாட்களுக்குள் அகற்றுமாறு நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிவிப்பில் அடுத்து வரும் மாதங்களில் ஆரம்பமாகவுள்ள மழைகாலத்தினைக் கருத்திற் கொண்டு மழைகாலத்தில் சீரான வெள்ளநீரோட்டத்தினை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வடிகால்கள் ஒழுங்கு முறையில் தூர்வாரப்பட்டு தூய்மைப்படுத்தும் செயற்பாடுகளை நல்லூர் பிரதேச சபை தொடர்சியாக மேற்கொண்டு வருகின்றது.

இவ் நோக்கத்தினைக் கூடியளவு வினைத்திறனாக மாற்றும் வகையில் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வடிகால்களினை தூர்வாருவதற்கு இடையூறாக வடிகால்களுக்குமேல் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களையும் வீதிகளில் போக்குவரத்து மற்றும் வெள்ள நீரோட்டத்திற்கு இடையூறாகக் காணப்படுகின்ற நிலக்கற்கள், கட்டுமானங்கள், பூச்செடிகள் என்பவற்றையும் எதிர்வரும் 15.09.2025 (திங்கட்கிழமை) இல் இருந்து பதினான்கு நாட்களுக்குள் அகற்றுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நல்லூர் பிரதேசசபையின் இப்பகிரங்க அறிவித்தலுக்கு ஏற்ப மேற்படி இடையூறுகளை அகற்றும் விடயங்களை குடியிருப்பாளர்களால் அகற்றப்படாவிடின் 01.10. 2025 ஆம் திகதியிலிருந்து எவ்வித முன் அறிவித்தலுமின்றி நல்லூர் பிரதேசசபை அவற்றினை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சபாநாயகருக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை

### எச்சரிக்கிறார் முஜிபுர் ரஹ்மான்

சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் விரைவில் முடிவெடுப்பார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நிறைவடையும் வரை பதவி விலகுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் வலியுறுத்தினோம்.

இந்தச் சம்பவம் நடக்கும்போது அவரே கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்தார்.

எனினும் அவர் பதவி விலகவில்லை. அரசும் அவரைப் பதவி நீக்கவில்லை. அதனால் தான் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இந்தப் பிரேரணையையைச் சபாநாயகர் நிராகரித்துள்ளார்.

சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட சட்ட ஆலோசனையை சபையில் முன்வைக்குமாறு நாம் சபாநாயகரிடம் வலியுறுத்தினோம். குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்க முடியும் எனச் சட்டமா அதிபர் கூறினார் என எமக்குத் தகவல் கிடைத்தது.

அதனை உறுதிப்படுத்திக் கொள்ளவே ஆவணத்தைக் கோரினோம். எனினும் அது வழங்கப்படவில்லை.

பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர முடியும்.

எனினும், சபாநாயகர் அரசியல் முடிவொன்றை எடுத்து அதனை நிராகரித்துள்ளார். இது அரசைப் பாதுகாக்கும் செயலாகும். இந்த விடயத்தில் சபாநாயகர் ஒரு தலைப்பட்சமாகச் செயற்பட்டுள்ளார்.

அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. அப்படி இருந்தும் எதற்காக விவாதத்துக்கு அஞ்ச வேண்டும்?

இந்தப்பிரேரணையை விவாதத்துக்கு எடுத்தால் ஆளுங்கட்சியில் உள்ள சிலருக்குக் கடந்த அரசுகளுடன் இருந்த தொடர்பு அம்பலமாகும். இதனால் தான் ஆளுங்கட்சி அஞ்சுகின்றது என்றார். (ம-7)

## களுத்துறையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(களுத்துறை)

களுத்துறை, புலத்சிங்கள, பாருதல்வில பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லொறி ஒன்று வீதியில் பயணித்த நபர் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர் புலத்சிங்கள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் களுத்துறை, புலத்சிங்களப் பகுதியைச் சேர்ந்த 69 வயதுடையவர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புலத்சிங்கள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## முச்சக்கரவண்டியில் திடீர் தீ விபத்து

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி தெகிந்த வீதியில் நேற்று (13) அதிகாலை பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியின் உரிமையாளர் நாவலப்பிட்டி தெகிந்த பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின் மீண்டும் திரும்புகையிலேயே திடீர் தீப்பரவல் ஏற்பட்ட நிலையில் தெய்வாதீனமாக குறித்த தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

முச்சக்கரவண்டியில் ஏற்பட்ட எரிபொருள் கசிவே தீ விபத்துக்கான காரணம் என நாவலப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சுற்றுலாவிகளின் வருகை இம்மாதம் ஏறுமுகத்தில்

2025 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 10 நாட்களில் 52 ஆயிரத்து 246 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் மாதத்தின் முதல் 7 நாட்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 300 ஆகும்.

அத்துடன் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 4 ஆயிரத்து 092 சுற்றுலாப் பயணிகளும் ஜேர்மனியிலிருந்து 3 ஆயிரத்து 488 சுற்றுலாப் பயணிகளும் சீனாவிலிருந்து 2 ஆயிரத்து 796 சுற்றுலாப் பயணிகளும் அவுஸ்திரேலியாவிலிருந்து 2 ஆயிரத்து 603 சுற்றுலாப் பயணிகளும் நெதர்லாந்திலிருந்து ஆயிரத்து 984 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 16 இலட்சத்து 18 ஆயிரத்து 769 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப்...

தளபதியாகவும் செயற்பட்ட டி.கே.பி. தசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இந்த விடயத் தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "தமிழீழ விடுத லைப் புலிகள் 30 வருட யுத்தகாலப் பகுதியில் இருந்து இறுதிப் போர் வரை 26 கப்பல்களைச் சொந்தமாக வைத்திருந்தனர்.

அவை யுத்தத்தில் கடற்படையால் அழிக்கப்பட்டது. ஆனால், இறுதிப் போரில் 12 கப்பல்கள் நிர்மூலமாக்கப் பட்டன. அவை மட்டுமே எமக்கு இப் போது ஞாபகத்தில் இருக்கிறது.

இறுதிப் போரில் இந்தியக் கடற்படையின் ஆதரவிலேயே 12 கப்பல்கள் நிர் மூலமாக்கப்பட்டன என்றார். (ம-7)






















## இரத்துச்...

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வது என்பது தேசிய மக்கள் சக்தியால் மக்களுக்கு அளிக் கப்பட்ட தேர்தல் வாக்குறுதியாகும் என்றார்.

மேலும் இலங்கையில் பயங்கர வாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவது குறித்து ஐரோப் பிய ஒன்றியம் சமீபத்தில் கவலை தெரிவித்தது.

அத்துடன், குறித்த சட்டமூலம் இந்த மாதம் ரத்து செய்யப்படும் என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் சமீபத்தில் பாராளுமன்றத்தில் தெரி வித்திருந்தார்.

அதன்படி, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வது குறித்து விசாரிக்க நீதி அமைச்சு ஒரு சிறப்புக் குழுவையும் நியமித்த நிலையில், அந்தக் குழுவின் அறிக்கையும் தற் போது அரசாங்கத்திற்குக் கிடைத் துள்ளது என்றார். (ம-7)

## எம்.பிக்களின்...

கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள் ளது.

அதேபோன்று பாராளுமன்ற உறுப் பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்கான சட்ட வரைவு தயாரிக் கப்படுகிறது. யார் எதிர்ப்பு தெரிவித் தாலும் விரைவில் அதற்கான சட்டம் நிறைவேற்றப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய ஜனாதி பதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக் கூடிய சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறை வேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியினர் இதற்கு வாக்களித்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் அதனை செய்ய வில்லை. மாறாக இந்த விடயத்தை மறைப்பதற்காக மறுநாள் சபையில் வேறொரு விடயத்துக்காக கூச்சலிட் டுக் கொண்டிருந்தனர் என்றார். (ம-7)

## நாட்டின்...

இதன்போது அரசியல், பொருளா தாரம், யுத்த வெற்றி உள்ளிட்ட பல விடயங்களைப் பற்றிய கருத்துக் களை அவர் தெரிவித்தார்.

தற்போது கால்டனில் வசித்தாலும், தேவை ஏற்படும் பட்சத்தில் கொழும் புக்கு விரைந்து வர தயாராக இருப் பதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தம் மீதான விமர்சனங்கள் தொடர்பாக கவலையடைய தேவை யில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விரைவில் நாட்டு அரசியலில் பாரிய சுழல்காற்று வீசக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

எனவே, இளைஞர்கள் முறையற்ற செயல்களில் ஈடுபடாமல், ஜனநாயக ரீதியில் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

## ராஜபக்ஷ...

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"விஜேராம மாவத்தையில் அமைந் துள்ள அரச இல்லத்தில் இருந்து வெளியேற மாட்டேன் என்று அடம் பிடித்த மகிந்த ராஜபக்ஷவை நாட்டின் சட்டம் இன்று அங்கிருந்து வெளி யேற்றியுள்ளது. இப்போது அவர் தங் காலையில் இருந்து கொண்டு அரசி யல் இலாபம் தேடும் வகையில் அழுது புலம்பியவாறு அறிக்கை விடு கின்றார்.

குடும்ப ஆட்சி நடத்தி இந்த நாட்டை அழித்த ராஜபக்ஷ குடும்பத்தினரை வரலாறு ஒரு போதும் மன்னிக் காது. பெரும் குற்றவாளிகளான அவர்கள், சட்டத் தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. உரிய தண்டனைகளை அவர்கள் அனு பவித்தே தீரு வார்கள் என் றார். (ம-7)

## பொரு...

தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பூர்வாங்க கலந்துரையாடலில் நேற்று முன்தினம் பங்கேற்றபோதே இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வர்த்தகத் துறைக்குத்தேவை யான உட்கட்ட மைப்பு வசதி களை வழங் குதல், சட்ட விதி களை உருவாக் குதல் மற்றும் ஒழுங்குபடுத் தலை அரசாங் கம் மேற்கொள் கிறது என்றும், உள்நாட்டு வர்த் தகர்களுக்கு மற் றும் தொழில் முனைவோ ருக்குச் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தி, அவர்கள் நாட் டின் பொருளா தார வளர்ச்சிக்கு முழுமையாக பங் களிக்க உதவு வது அரசாங்கத் தின் எதிர்பார்ப் பாகும் எனறும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாய க்க தெரிவித்தார். (ம-7)

## போர்க்குற்றங்...

அமைச்சர் அருண ஜயசேகர தெரி வித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள தனிப்பட்ட செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதன்போது மேலும் கருத்து தெரி வித்துள்ள பிரதி அமைச்சர், "போரின் போது நிகழக்கூடாத சில விடயங்கள் நடந்திருக்கலாம் என்ற கருத்துகள் இருக்கின்றன.

ஆனால் அவை அனைத்தும் போர்க்குற்றங்கள் என்ற வகையில் வராது, போரின்போது சில சூழ்நிலை கள் தவிர்க்க முடியாமல் ஏற்படும்" எனக் கூறியுள்ளார்.

அதனால் இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக அர்த்தமில்லை என்றும் அவர் தெரி வித்துள்ளார். (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


சிவார்ப்பணம்

# கடையவரின் காலடியில்....

2025 இல்

## 3 ஆம் ஆண்டு நினைவுதனில்...

## 2 ஆம் ஆண்டு நினைவுதனில்...







### அமரர் பாலசுப்பிரமனியம் ஸ்ரீரங்கநாதன்

திதி : ஆவணி அபரபட்சஅட்டமி திதி
14.09.2025

ஈழத் திருநாட்டில் யாழ்ப்பாண நகர்தனிலே
நீர்வாவியடி என்னும் அழகிய ஊர்தனிலே
கடையிற்சுவாமியாரின் சமாதித் திருத்தலமாம்
அடியார்க்கு கனிந்து அருளும் ஈசனவர் அருள் தலமாம்

ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்றினிலே
ஈசன் அருள் கொண்ட சிறப்புறு திருத்தலம்
பராமரிப்பு இன்றி பழுதடைந்த நிலைகண்டு
பக்தர் உம் மனம்தான் வேதனையால் உடைந்ததுவே

குருநாதர் அருளாலே கோயில் ஒளிபெறவேண்டி
ஊர்மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பணிபுரிந்தீர்
மக்கள் முயற்சியிலே மலர்ந்த திருத்தலத்தில்
இறுதி வரை தொண்டராய் இணைந்து வாழ்ந்திருந்தீர்

இறைவனுக்காய் உம்மை அர்ப்பணித்து சேவை செய்தீர்
வாலாம்பிகை அம்மைக்கு அன்பாய் அமுது படைத்தீர்
வாழ்வுதனில் இணையாய்வந்த இல்லத்து அரசியையும்
சிவசேவையில் இணைத்துத்தான் சிறப்புற வைத்தீரே!

### அமரர் மாலினி ஸ்ரீரங்கநாதன்

திதி : மார்கழி பூர்வபட்ச சதுர்த்தசி திதி
02.01.2026

பக்தரோடிணைந்து கடையவர்க்கு பூஜை செய்தீர்
அன்றாட வாழ்வு ஆலயம்தான் என்றானீர்
வழமைபோல் ஆலயத்தில் விளக்கேற்றி வலம்வந்து
வணங்கி அமர்ந்து கற்பூரம் ஏற்றிவிட்டு

கண்கள் இமையாது கருவறை நோக்கிடவே
ஈசனவர் தாளதற்கு எழுந்துதான் சென்றீரோ!
இங்கு உன் சரியை போதும் என்று கூறி
கரம்பற்றி அழைத்தாரோ கடையிற் குருநாதன்

வாலாம்பிகை அம்மைக்கும் வைத்தியநாதர் ஐயனுக்கும்
திருவூஞ்சல் சேவை செய்ய சிறப்பாய் சென்றீரோ!
முத்தி கிடைத்ததுவோ இறைவன் காலடியில்
அம்மையின் அருள் உம்மை அன்பாய் அரவணைக்கும்

சிறப்புற்ற சிவ சேவை
சிவனோடு இணைத்ததுவே!
ஓம் நமசிவாய

இல.33, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ஈரவிழிகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5419)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதியில் (கோப்பாய் வீதிக்கு மிக அருகாமையில்) வீட்டுடன் கூடிய (4பரப்பு)க் காணியும் பல வருவாயுடன் கூடிய (3 பரப்பு 15குழி) காணியும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(5384)

**077 412 1657**
**077 732 8583**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு. 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5329)

**076 663 3199**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

**Special offer 50% Pratical on Computer**

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(5158)

**T.P : 077 780 3970**

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், மட்டக்களப்பு, கொடிகாமம், யாழ்ப்பாணம், நெல்லியடி, திருகோணமலை, புத்தூர், பருத்தித்துறை, கிளிநொச்சி, சாவகச்சேரி, சங்கானை, வல்வெட்டித்துறை

(C-38873)

**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236

v2vacancies@gmail.com

## JCB வாடகைக்கு விடப்படும்

புதிய ENGLAND JCB எம்மிடம் உள்ளது. வேலை செய்யத் தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(1546)

**077 649 1027**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 172/= | |
| 5Kg பிறிமா கோதுமை மா | - 950/= | ~~1150~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 310/= | Max 3Kg |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 230/= | Max 3Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 188/= | |
| 1Kg கடலை | - 370/= | Max 3Kg |
| 1Kg சோயா | - 310/= | |
| 1Kg கடலைப் பருப்பு | - 310/= | |
| 1Kg சிவப்பு அவல் | - 305/= | |
| 1Kg சர்க்கரை | - 255/= | |
| 1Kg உள்ளி | - 390/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |

400g Anchor



1140/= ~~1200/=~~

11டசின் தீப்பெட்டி



140/= ~~240/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1550)

Happy Supermarket
0777 8080 30

## வெளிநாட்டில் (canada) இல்வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை

1981(Divorce), 1990, 1990(Divorce), 1993, 1995(02), 1997, 1999,ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உடனடியாக உள்ளூர் மணமகன்கள் தேவை.

1991, 1992, 1998 ஆகிய கனடா மணமகள்களிற்கு திருமணம் இவ்வாறம் நிச்சயிக்கப்படவுள்ளது.

(5418)

**077 041 3462, 077 408 8241**

## சிங்கள வகுப்புக்கள்

2026 புதிய கல்வி ஆண்டிற்கான இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள் (புதிய கல்விச் சீர்த்திருத்தங்களுக்கமைய)

ஆரம்பம் : 17.09.2025 புதன்கிழமை மாலை 03.00 மணி
இடம் : 55/6 கல்லூரி வீதி,யாழ்ப்பாணம்
(இலங்கை வேந்தன் மண்டபத்திற்கு அருகில்)

(5367)

**077 990 6867, 076 970 6867**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## காணிகள் தேவை

யாழ்.மாவட்டத்தில் காணிகள், வீடுகள் தேவை.யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்தப் பிரதேசத்தில் இருந்தாலும் 10 பரப்புக்கு மேற்பட்ட நிலப்பரப்புக் காணிகள், வீடுகள் தேவை.

ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர் உடனடியாக வாங்கப்படும்.

காணி உரிமையாளர்கள் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

(5406)

**077 986 5457 (சதீஸ்)**
**077 241 7589 (ராஜா)**
**077 805 1655 (ஜெயம்)**

## வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு (Computer Billing) செய்யக்கூடியவர்கள் - பழக விரும்புபவர்கள் தேவை.

**தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.**

**ஆண்கள் மட்டும்**

- ❖ தகைமை : அடிப்படை கணனி அறிவு அவசியம்
- ❖ வயதெல்லை : 20 - 30 வரை

(5361)

**070 401 6775**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் ரெக்னிக் கொலிஜ்க்கு முன்பாக 24 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக

(5405)

தொடர்புகளுக்கு : **076 755 8606**
**074 338 4481 / 077 638 5683**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.